Registered at the G P. O. as a Newspaper

வாரப் பதிப்பு

# ஈழநாடு

EELA NADU

போன் 349 National Tamil Daily தேசிய தினசரி

மலர் 5 யாழ்ப்பாணம் சோபகிருது மார்கழி 21 ஷஃபான் பிறை 19 (5-1-64) ஞாயிற்றுக்கிழமை இதழ் 329

சிக்கன செலவிற்கு
வாங்குங்கள்! பாவியுங்கள்!
மில்க்வைற நீல சோப
மில்க்வைற பார் சோப்
மில்க்வைற் 10 சதம் சோப்
மில்க்வைற் 5 சதம் சோப்

நிக்கவரெட்டியா உபதேர்தல் :

# யு. என். பி. வெற்றி!

## சுதந்திரக்கட்சிக்கு 3வது இடம்

### அதிகாலை 2-15க்கே முடிவுகள் வெளியாகின

கொழும்பு, ஞாயிறு

நேற்று நடைபெற்ற நிக்கவரெட்டியா உபதேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த திரு. கவிசேனு ஹேரத் 3240 அதிகப்படியான வாக்குகளால் வெற்றியீட்டினார். முன்னாள் எம். பி. திரு. முதியான்சே தென்னக்கூன் இரண்டாவதாகவும், சிறிலங்கா சுதந்திரக்கட்சி அபேட்சகர் மூன்றாவதாகவும் வந்தார்கள்.

பதில் நிதிமந்திரியாகக் கடமையாற்றிய திரு. முதியான்சே தென்னக்கூன் தனது எம். பி. பதவியை ராஜினாமாச் செய்ததைத்தொடர்ந்தே இந்த உபதேர்தல் நடைபெற்றது.

அரசியல் அவதானிகள் இந்த உபதேர்தலை ஒரு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதினர்.

நேற்றுகாலை 8மணி தொடக்கம் மாலை 5 மணிவரையும் வாக்களிப்பு நடைபெற்றது. ஆனால் வாக்குகள் இரவு 10 மணிக்கே எண்ண ஆரம்பிக்கப்பட்டு, முடிவுகள் அதிகாலை 2-15 மணிக்கு குருநாகல் கச்சேரியில் வெளியிடப் பட்டன. மொத்த வாக்காளர்களில் 77 சதவிகிதத்தினர் வாக்களிப்பில் கலந்துகொண்டனர்.

தேர்தல் முடிவுகள் வருமாறு:

கவிசேனு ஹேரத் (ஐ. தே. க) 13,915

முதியான்சே தென்னக்கூன் (சுயேட்சை) 10,675

ஆர். எம். தென்னக்கூன்

(10-ம் பக்கம் பார்க்க)

### முடிவில்லை

கொழும்பு, சனி

இலங்கை வர்த்தக சங்கம் நடத்திவரும் வேலைநிறுத்தம் பற்றி அரசாங் அதிகாரிகளுக்கும் வர்த்தக சங்க அதிகாரிகளுக்கும் இடையில இன்று பேச்சுவார்த்தை நடைபெற்றதாயினும் வேலைநிறுத்தம் சம்பந்தமாக எதுவித இறுதிமுடிவும் செய்யப்படவில்லை.

இலங்கை - இந்தியர் பிரச்னை

## புதுடில்லி மகாநாடு அடுத்த மாதம் நடைபெறும்

### பிரதமர் ஸ்ரீமா டில்லி செல்வார்

கொழும்பு, சனி

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினர் சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்தும் பொருட்டு புதுடில்லியில் ஒரு மகாநாட்டை கூட்ட ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த மகாநாடு அநேகமாக பெப்ரவரிமாதம் நடுப்பகுதியில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த மகாநாட்டில் இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் இந்தியப் பிரதமர் நேருவும் இலங்கை வாழ் இந்திய சமூகத்தினர் குறித்து பேச்சுக்கள் நடத்துவார்கள்.

மகாநாட்டில் கலந்துகொள்ளும் பொருட்டு இலங்கைப் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அடுத்த மாதம் 15-ம் திகதி புதுடில்லிக்கு செல்வார் என்று நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

இலங்கை-இந்தியர் பிரச்னை சம்பந்தமாக ஒரு மகாநாட்டை கூட்டி பேச்சுவார்த்தைகள் நடத்த முன்னர்; இப்பிரச்னை சம்பந்தமாக இலங்கையிலுள்ள அரசியல் கட்சித் தலைவர்களின் கருத்தை ஆராய்வதென்று அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

புதுடில்லியில் நடைபெறும் மகாநாட்டில் இலங்கைக்கு சட்டவிரோதமாகக் குடியேறுபவர்கள் விஷயம் குறித்தும் தற்காலிக வாசபாமிட்டில் இலங்கையில் வாழும் இந்தியர்கள் விஷயம் குறித்தும் ஆராயப்படும்.

யாழ்ப்பாணம் மாநகரசபை

## "சிங்கள ஊழியரை உடன் இடமாற்றவும்"

### உள்ளூராட்சி சேவைத் தலைவருக்கு யாழ். மேயர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு புதிய சுகாதார மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ள சிங்கள உத்தியோகஸ்தரை உடனடியாக இடமாற்றம் செய்யும்படி கோரி யாழ்ப்பாண மாநகரசபை மேயர் திரு. டி. எஸ். துரைராசா உள்ளூராட்சி சேவைத் தலைவருக்குக் கண்டனக் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு தமிழ் மொழியில் தேர்ச்சி பெறாத சிங்கள உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டதைக் கண்டித்து யாழ்ப்பாணம் மேயர் திரு. டி. எஸ். துரைராசா உள்ளூராட்சி சேவை தலைவருக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார். குறிப்பிட்ட சிங்கள உத்தியோகத்தரை உடனடியாக இங்கிருந்து அழைத்து, அவரது ஸ்தானத்தில் தமிழில் தேர்ச்சி பெற்ற வேறு ஒரு உத்தியோகத்தரை நியமிக்கும்படியும் மேயர் தமது கடிதத்தில் கேட்டுள்ளார்.

மேயர் திரு. துரைராசா தமது கடிதத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது:- சுகாதார மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ள திரு கருணாரத்னவுக்கு தமிழில் தேர்ச்சி உண்டு எனத் தெரிவித்து கடந்த டிசம்பர் மாதம் 2-ந் திகதி எமக்கு அனுப்பிய கடிதத்தின் கூற்று உண்மைக்கு மாறானது என்பதை முதலில் உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரை அழைத்து விசாரித்தபொழுது

(10-ம்பக்கம் பார்க்க)

## துணிகளை அதிகவிலைக்குவிற்றால் லைசென்ஸ் பறிமுதலாகும்

### யாழ். அரசாங்க அதிபர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள புடைவைவியாபாரிகள், கட்டுப்பாட்டு விலைக்கு கூடுதலாகவோ அல்லது புடைவை இருப்பில் இருக்கக்கூடியதாக அதை விற்பனை செய்ய மறுத்தாலோ; அல்லது வாடிக்கைக்காரர்கள் பார்க்கக் கூடியதாக கட்டுப்பாட்டு விலைகளின் பட்டியலை கடையில் தொங்கவிடாது போனாலோ அது அரசாங்க அதிபரின் கவனத்துக்குக் கொண்டுவரப்படின் அபராதம் விதிப்பதுடன் மட்டுமல்லாது லைசென்ஸும் ரத்துச் செய்யப்படும்.

விலைக்கட்டுப் பாட்டுக்குள் பின்வரும் துணிவகைகள் அடக்கப்பட்டுள்ளன:- 1. பருத்தித் துணிவகைகள், 2. சேலைகள், 3. சால்வைகள், 4. வேட்டிகள், 5. சாரங்கள், 6. கம்பாயங்கள்.

புடைவை வியாபாரிகளுக்கு விதிக்கப்பட்டுள்ளபடி, அவர்கள் 1 ஒவ்வொருவராக ஜவுளியினதும் மிகக்கூடிய விலை குறிக்கப்பட்ட பட்டியலை எல்லோரும் பார்க்கக்கூடிய ஏற்ற இடத்தில் தொங்கவிடவேண்டும். 2. மொத்தவிற்பனவு வியாபாரியும் அதே விதமாக தாம் விற்பனை செய்யும் புடவைகளின் மொத்தவிலை குறித்த பட்டியல் தொங்கவிடவேண்டும் 3. புடவை வியாபாரி எவராயினும் குறிக்கப்பட்டவிலையிலும் கூடுதலாக விற்கக் கூடாது. 4. தம்வசம் இருப்பில் உள்ள எந்தப் புடவையானாலும் விற்பனை செய்ய மறுக்கப்படாது. 5. ஒவ்வொரு புடவை வியாபாரியும 'உத்தரவு பெற்ற வியாபாரி' யாக 1961-ம் ஆண்டின் வியாபாரக் கட்டுப்பாட்டின் 62-வது சட்டப்படி கணிக்கப்படுவர் 6. இச்சட்டத்தின் கீழ் ஒவ்வொரு புடவை வியாபாரியும் லைசென்ஸ் பெற்றவராயிருக்க வேண்டும்.

இவ்விதிகளுக்கு அமைந்து நடக்காதவரெவரானாலும் அபராதம் விதிக்கப்படுவதுமட்டுமல்லாது, லைசென்ஸும் ரத்துச் செய்யப்படுமென்பதை அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

நெற்பயிரில் உண்டாகும் சகல களைப் புல்லையும் அழிப்பதற்கு

கெடோனல் - சர்க்கோபர்

HEDONAL - SURCOPUR

Agents:

T'GRAMS: ROYAEL ROYAL DISPENSARY PHONE: 397 JAFFNA.

# இந்த வாரம் உங்கள் இராசி பலன் எப்படி ?

"அத்திரி" எழுதுகிறார்

[5-1-1964 தொடக்கம் 11-1-1964 வரை]

**மேடம்**

(அஸ்வினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதத்தில் ஜனனமானவர்களுக்கு) இந்த வாரத்தில் குடும்பத்திலுள்ளவர்களுக்கு மாறி மாறி சுகயீனங்கள் ஏற்பட்டுக்கொண்டேயிருக்கும். வைத்திய செலவுகளும் அதிகரிக்கும். நீர் நிறைகளில் குளிப்பதை விடுதல் நலம். அதனால் ஆபத்துக்கள் ஏற்படக்கூடும். உங்களுடைய குடும்பத்தாரின் போக்கினால் அதிக மனவருத்தமும் கவலையும் ஏற்படும். இதை எண்ணி எண்ணி மனம் புண்படும். சகிப்புத் தன்மைக்கு இது ஒரு சோதனைகாலம். முற்கோபமுள்ள இந்த இராசிக்காரர்கள் மிகவும் அடக்கமாகக் காரியங்களைக் கவனிக்கவேண்டும்.

**இடபம்**

(கார்த்திகை 2 3,4-ம் பாதங்களிலும் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம்பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) உங்களுக்கு மனச் சாந்தியைக் கொடுக்கக்கூடிய காரியங்களைக் கவனித்துக்கொண்டு மற்றக் காரியங்களை தவிர்க்கவேண்டும். அனுவசியமான வாக்கு வாதங்களில் ஈடுபட்டால் அதனால் வீண் கலவரங்களும் மனஸ்தாபங்களும் ஏற்படும். உஷ்ண சம்பந்தமான ரோகங்களும் தொற்றுக் கிருமிகளினால் ஏற்படும் ரோகங்களும் வார இறுதியில் தலைகாட்டக்கூடும். கெட்ட சொப்பனங்கள் தோற்றுவதினால் திடுக்காட்டமும் நித்திரையின்மையும் ஏற்படும். சூரிய வழிபாடு இவர்களுக்குச்சிறந்த பரிகாரமாகும்.

**மிதுனம்**

(மிருகசீரிடம் 3, 4-ம் பாதங்களிலும், திருவாதிரை, புனர்பூசம், 1, 2, 3-ம் பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) இந்த இராசிக்காரர்கள் கணவனுயிருந்தால் மனைவியிலும் மனைவியாயிருந்தால் கணவனிலும் தப்பபிப்பிராயம் ஏற்பட்டு அதனால் குடும்பத்தில் சச்சரவுகளும் நிம்மதிக்குறைவும் ஏற்படும். நித்தியச் செலவுகளுக்கே பணம் போதாமையால் கஷ்டப்படும் இவர்களுக்கு மேற்கொண்டும் அனுவசியமான செலவுகள் ஏற்படுவதினால் மிகவும் திணறுவார்கள். நிதானமாகச் செலவுகளைக் கட்டுப்படுத்தி நடக்க நீங்கள் எத்தனிக்கும் பொழுது உங்கள் குடும்பத்தினர் அனுவசியமான செலவுகளை இழுத்து வைப்பார்கள்.

**கடகம்**

(புனர்பூசம் 4-ம் பாதத்திலும், பூசம், ஆயிலியத்திலும் ஜனனமானவர்களுக்கு) புதுவிதமான முயற்சிகளில் ஈடுபடுவதற்கு இந்த வாரத்தில் சந்தர்ப்பங்கள் ஏற்படும். குடல் பலவீனத்தால் சிலருக்கு வயிற்றுக் கோளாறுகள் ஏற்படலாம். உங்களுடைய தேகசுகத்தில் போதிய கவனஞ் செலுத்தா விட்டால் வார இறுதியில் அவஸ்தைப்படுவீர்கள். முன் ஒரு காலத்தில் ஆரம்பித்த தொழிலொன்று லாபத்தைக் கொடுக்கும். உங்களுடைய முன்னோர் வழிச் சொத்தொன்றில் ஏற்பட்ட சிக்கல் தீர்ந்து அதனால் சொற்ப பண வருவாயை எதிர்பார்க்கலாம். புதன்கிழமை உங்களுக்கு அநுகூலமான நாள்.

**சிங்கம்**

(மகம், பூரம், உத்திரம் 1-ம் பாதத்தில் ஜனனமானவர்களுக்கு) தர்ம காரியங்களுக்கும் தெய்வீக காரியங்களுக்கும் உங்களுடைய பணம் அதிகமாக இந்த வாரத்தில் செலவாகும். இந்த விஷயங்களில் உங்களையறியாமலே நீங்கள் ஈடுபட வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படும். உங்கள்கள் உறவினர்களுடைய சில வேற்றுமைகளால் சச்சரவுகள் ஏற்படக்கூடும். உங்களுடைய தலையீட்டினால் இவைகள் சுமுகமாகத் தீரும். உங்கள் குடும்பத்தில் பெரியவர்களுடைய அநுதாபம் உங்கள் பக்கமிருப்பதினால் எந்தக் காரியத்தையும் இலகுவில் செய்து முடிப்பீர்கள்

**கன்னி**

(உத்திரம் 2, 3, 4-ம் பாதத்திலும், அத்தம், சித்திரை 1, 2-ம் பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) நில புலன்களின் மூலம் அற்பபண வரவு ஏற்படும். அனுவசியமான, உல்லாசமான பொழுது போக்குக்கு இந்தவாரத்தில் இடமிராது- உங்கள் குடும்பத்தினர் அனுவசியமான செலவுகளை ஏற்படுத்தி உங்கள் கையிலிருக்கும் பணத்தைக் கரைத்து விடுவார்கள். வார இறுதியில் வெளியூர்ப்பிரயாணம் ஏற்படக்கூடும். தேகசுகத்தைப் பொறுத்த வரையில் இந்த வாரம் மத்திமமாய் இருக்கும். உங்கள் புத்திக்கு எட்டாத பல பிரச்னைகள் இந்த வாரத்தில் தோலமறி மறையும். வியாழக்கிழமை அநுகூலமான நாள்.

**துலாம்**

(சித்திரை 3, 4-ம் பாதங்களிலும், சுவாதி, விசாகம் 1, 2, 3-ம் பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) இந்த வாரத்தில் அதிக இலாபமில்லாத தொழிலில் ஈடுபடநேரிடும். இலாபமில்லாவிட்டாலும் அதிக நஷ்டம் ஏற்படாது. அலயவர்களால் பலதொல்லைகள் ஏற்பட்டாலும் வார இறுதியில் சுமுகமாகத் தீரும். தொழில் விஷயங்களில் உங்கள் நண்பர் ஒருவரின் தலையீட்டினால் மனநிம்மதி குறையும். உங்களுடைய சட்டுப்பாட்டுக்கு மாறாக நடக்கும்படி உங்களைத்தூண்டுவார்கள். மிகவும் கவனமாக நடக்காவிடில் தொழிலிலுள்ள கட்டுப்பாடு குலைந்து சீர்கெட்டு விடும். பந்துக்களின் சொண்டாட்டம் மனநிம்மதியைத் தரும்.

**விருச்சிகம்**

(விசாகம் 4-ம் பாதத்திலும் அனுஷம், கேட்டையிலும் ஜனனமானவர்களுக்கு) இந்தவாரத்தில் காத்திராப்பிரகாரமான செலவுகள் ஏற்படும். உங்கள் தொழிலில் சிரத்தைக்குறைவும் அலுப்பும் ஏற்படப்பார்க்கும். இதனால் பின்னுக்கு மனவருத்தப்படுவீர்கள். அவசர புத்தியில் கைமாற்றுக்கடன் கொடுத்தோ, அல்லது மற்றவர்களின் கொடுக்கல் வாங்கலுக்குப் பிணைநின்றோ உதவி செய்யப்போனீர்களானால் மாட்டுப் படுவீர்கள். எந்த விஷயத்திலும் நிதானமாக நடந்து கொண்டீர்களானால் சுகமுண்டு சுற்றத்தவர்களினால் பலவிதமான தொல்லைகள் ஏற்படக்கூடும்.

**தனுசு**

(மூலம், பூராடம், உத்திராடம் 1-ம் பாதத்தில் ஜனனமானவர்களுக்கு) நீங்கள் எடுக்கும் முயற்சியெல்லாம் தாமதத்தில் கைகூடும். நீங்கள் நிம்மதியாக எந்தக் காரியங்களையும் ஒப்பேற்ற முடியாமல் தவிப்பீர்கள். நீங்கள் எதிர்பார்த்த உதவிகளெல்லாம் தாமதத்தில் கிடைக்கும். இதனால் மனநிம்மதியிழந்து ஆத்திரமடைவீர்கள். உங்களுடைய ஆப்தநண்பர் ஒருவருடைய மறைவினால் மனத்துன்பமடைவீர்கள். உற்சாகமாகவும் மனத்தைரியத்துடனும் மனம்துணிந்துகாரியங்களைக் கவனித்தால் எதையும் ஒப்பேற்றலாம். சனிக்கிழமை மிகவும் கூடிய பண நெருக்கடி ஏற்படும்.

**மகரம்**

(உத்திராடம், 2, 3, 4-ம் பாதங்களிலும், திருவோணம், அவிட்டம் 1,2-ம்பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) புதுத் தொழில் ஆரம்பிப்பதற்கும் ஏதாவது புது ஒப்பந்தம் செய்வதற்கும் இந்த வாரம் மிகவும் சிறந்தது. பொதுக்காரியங்களிலும் தர்மகைங்கரியங்களிலும் ஈடுபடுவதற்கு இந்த வாரம் மிகவும் சிறந்ததாக அமையும். எந்தக்காரியங்களிலும் இறங்கும் பொழுதும் கவனித்துப் பார்த்து இறங்கவும். இந்த வாரத்தில் உங்களுடைய புத்தியை கவனமாகப் பாவித்தால் எத்தனையோ காரியங்களை எளிதில் சாதிப்பீர்கள். ஒரு தரத்திற்கு இருதரம்யோசித்து எதையும் செய்ய வேண்டும். உங்கள் கையெழுத்தைப் போடும்பொழுது நன்ருக யோசித்துப் போடவும்.

**கும்பம்**

(அவிட்டம் 3, 4-ம் பாதங்களிலும், சதயம், பூரட்டாதி, 1, 2, 3-ம் பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) கொடுக்கல் வாங்கலுக்கு இது மிகவும் உகந்தவாரம். வருகிற செவ்வாய்க்கிழமை மிகவும் அடக்கத்துடன் கோபத்தை அடக்கவும். சாந்தமான முறையில் மிகவும் நிதானமாக நடந்து கொண்டீர்களானால் அது பெரும் நன்மைகளைத்தரும். பழைய கொள்கைகளை உதறியெறிந்துவிட்டு புதுவிதமான முற்போக்கான காரியங்களில் ஈடுபடுவீர்கள். உங்களிடம் ஏற்படும் இந்த மாற்றத்தைக் கண்டு உங்கள் நண்பர்களே ஆச்சரியப்படுவார்கள். பழைய காதலர் ஒருவர் உங்களுடன் நெருங்கிப்பழகி புதுஉற்சாகத்தைத் தருவார்.

**மீனம்**

(பூரட்டாதி 4-ம் பாதத்திலும், உத்திரட்டாதி, ரேவதியிலும் ஜனனமானவர்களுக்கு) உங்களுக்குச் சாதகமான எந்தத் தருணத்தையும் தவறவிடாதீர்கள். அற்பவிஷயமாயிருந்தாலும் அலட்சியம் செய்யாமல் அக்கறையுடன் கவனியுங்கள். இதனால் பெரும் இலாபங்கள் பின்னுக்குண்டு. உறவினர்கள் அல்லது நண்பர்களைவிட பிறத்தியாரின் உதவிதான் உங்களுக்கு இந்தவாரம் கிட்டும். கோவில்களில் நேத்திக்கடன் செய்துகொள்வதற்கு இந்த வாரம் மிகவும் அனுகூலமாயிருக்கும். இந்த வாரத்தில் நாவடக்கமாகபேசவேண்டும். மற்றவர்களுக்கு பிடிகொடுத்து வார்த்தைகளைச் சிந்திவிட்டீர்களானால் பின்னுக்குக் கவலைப் படுவீர்கள்.

# தன்னை வென்ற தீரர்

— தூரதர்சினி —

1951-ம் ஆண்டு ஆவணி மாதத்தில் ஒருநாள். இலங்கை முழுவதிலும் ஒரே பரபரப்பு. எல்லோர் மனத்திலும் ஒரே சிந்தனை. அவர் என்ன செய்வார்? மந்திரிசபையில் இருப்பாரா? அல்லது விலகி விடுவாரா? விலகினால் என்ன நடக்கும்? என்ற கேள்விகளுக்கு என்ன மறுமொழி கிடைக்கப் போகுதென்று வானொலிப் பெட்டியருகில் ஒட்டிக்கொண்டிருந்தோம். கடைசியாக இரவு 9 மணிக்கு அந்தச்செய்தி வானொலியின் வாயில் வெளி வந்தது.

திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா யூ. என். பி. மந்திரி சபையிலிருந்து விலகி எதிர்க்கட்சியில் சேர்ந்துவிட்டார் — என்றது வானொலி.


டி. எஸ். சேனநாயகா மந்திரிசபையிலிருந்து அவர் பிரிந்து போகும்போது பண்டாரநாயகா கூறிய வார்த்தைகள் அர்த்தபுஷ்டியானவை. அவர் சொன்னார்: "நான் என்னை வென்றுவிட்டேன்!"

சேனநாயகாவுக்குப்பின் யூ. என். பி யின் தலைவராகவும், அவ்வழியாகபிரதமமந்திரியாகவும் வரப்போவது யார் என்பது பற்றி சேர் ஜோன் கொத்தலாவலைக்கும் பண்டாரநாயகாவுக்குமிடையே நெடுங்காலமாக வளர்ந்து வந்த பிணக்கு ஒரு புறமிருக்க, சோஷலிஸ தத்துவங்களை விரும்பும் பண்டாவுக்கு யூ என் பி. யில் நீடித்திருப்பது மிகவும் கடினமாகிப் போய்விட்டது உண்மை.

ஆயினும் மந்திரிப் பதவியை அவர் இலேசாக கைவிடமாட்டார் என்றே பலர் நம்பியிருந்தார்கள் பொதுமக்களின் பிரதிநிதியாக பாராளுமன்றத்துக்கு அனுப்பப்பட்டு மந்திரிப் பதவிக்கு வந்த ஒருவர் கொள்கை காரணமாக ஆளும் கட்சியுடன் மனஸ்தாபப்பட்டால், அல்லது பொதுநலனுக்கு விரோதமாக ஒரு தவறு செய்துவிட்டால் உடனே தமது பதவியை ராஜினமா செய்வதே ஜனநாயக முறையாகும். இந்தியாவில் ஒரு ரயில் புரண்டதற்காக போக்குவரவு மந்திரி ஒருவர் ராஜினமாச் செய்தார்! சமீபத்தில் ஒரு பெண்ணுடன் தவறுதலாய் நடந்துகொண்டதற்காக பிரிட்டிஷ் மந்திரி ஒருவர் ராஜினமா செய்தார். (இரண்டாவது போன்ற ஒரு சம்பவம் இலங்கையிலும் நடந்து உண்மைதான்!) ஆனல் இலங்கையில் மந்திரிசபைக்குப் போய்ச்சேர்ந்த ஒருவர் எதுவரினும் அப்பதவியை அழுங்குப்பிடியாய்ப் பிடித்துக் கொண்டிருப்பார் — யமன் வந்தாலொழிய அவரை அசைக்க இயலாது - என்பது

(3-ம் பக்கம் பார்க்க)

## சகோதரியருக்குப் புத்தாண்டு நல்வாழ்த்து!




எளிமையான முறையில் அழகைக் கொண்டுவருவது ['ஐங்கோணம்' (1.) இவ்வெளிய முறையிலிருந்தே பல பல வழிகளில் விரிவடைந்து சிறந்த வேலைப்பாடமைந்துள்ள கோலங்கள் உருவாகியுள்ளன. வில்வ தளம் (2) என அழைக்கப்படும் கோலமும் இந்த வகையைச் சேர்ந்ததே. இது சைவ மக்களால் பெரிதும் போற்றப்படும் கோலம். 'படிக்கோலம்' என்பது (3) முக்கியமாகக் கல்யாணச் சமயங்களிற் போடப்படும் கோலம். பொங்கற் பண்டிகைக்கு உகந்த 'கோலம் தேர்க்கோலம்' (4). அதனுள் அத்தினத்தின் தெய்வமாகிய கதிரவன் வடிவத்தை அமைத்து வணங்குவர். கோல வடிவங்களுள் பலராலும் உபயோகிக்கப்படுவது தாமரைக் கோலங்கள். குவிதாமரை (5) எந்தச் சுப காரியத்திற்கும் பொருந்தும். கமலக் கோலங்களுள் சிறப்பாகக் கருதப்படுவது 'இருதய கமலம்' (6). இருதய கமலத்தில் பரம் பொருள் இருப்பதாக ஐதீகம் இருக்கின்றதல்லவா? அதனலேயே இதற்குச் சிறப்பு மிகுதி.

அனுப்பியவர்: கற்பகம்.

# ஆனந்தக்கண்ணீர் வருவிக்கும் அதிஅற்புத நுண்ணுர்வு

— வி. என். பி. —

இன்பத்தை விழைவது மனித இயல்பு. வாழ்க்கையில் ஒருவனுக்கு இன்பமுண்டாகும் நிகழ்ச்சிகளும் துன்பத்தைக் கொடுக்கும் நிகழ்ச்சிகளும் ஏற்பட்டிருக்கும். துன்பகரமான சம்பவங்களை அவன் விரைவில் மறந்துவிடுகிறான். இன்ப நினைவுகள் இலகுவில் அவன் மனத்திலிருந்து மறைந்துவிடுவதில்லை. (இது மாயையின் செயல்; வாழ்க்கையில் உண்டான துன்பங்களையே எப்பொழுதும் சிந்தித்துக்கொண்டிருப்பானாகில், அவன் வாழ்க்கையில் வெறுப்புற்று மறுபடியும் மானிட ஜன்மம் எடுக்காமல் இருப்பதற்கு வழி தேடுவான். ஆகையால்தான் மாயை எனப்பட்டது எப்பொழுதும் அவனுக்கு லௌகீக இன்பத்தையே நினைவூட்டிக்கொண்டிருக்கிறது.) உயிருள்ள பிராணி எதுவும் எப்போதும் உவகையையே நாடிக்கொண்டிருக்கிறது.

சிருங்காரம் (உவகை, இன்பம், காதல், களிப்பு) நவரஸங்களிலும் தலையாயது. இன்னுமொரு காரணத்துக்காக சிருங்காரம் நவரஸங்களுக்குள் முதலிடம் பெறுகின்றது.

சிருங்காரத்துக்கு இருவித அடிப்படைகள் உண்டு என்று பரதர் கூறுகின்றார்— கூடுதல் (சம்போகம்), பிரிதல் (விப்பிராலம்பம்). தலைவனும் தலைவியும் கூடும்போது இன்ப ரஸம் பிறக்கிறது. பிரிந்திருக்கும்பொழுது சோகரஸம் பிறக்கிறது. ஆனால் இந்த சோகம் சாதாரணமாக தேக உபாதை, இழவு முதலியவற்றால் உண்டாகும் சோகத்தைப் போன்றதல்ல. தலைவனைப் பிரிந்த தலைவி, கூடியிருந்தபோது தான் அனுபவித்த இன்பத்தை நினைந்தும், தலைவன் விரைவில் திரும்புவான்- அப்பொழுது அவனோடு சல்லாப கேளிக்கைகள் செய்யலாம்-என்பதை நினைந்தும் ஆனந்தமடைகிறாள். சோகத்திலும் இன்பம் பிறக்கிறது. சோகமான பாட்டுகளே மிகவும் இனிமையானவை என்று மகாகவி ஷேக்ஸ்பியர் கூறுகிறார். சோக நிலையில் இன்பம் பிறப்பதுபோல், பிரிந்துபோயிருந்த தலைவனும் தலைவியும் மீண்டும் கூடும்போது ஆனந்த மேலீட்டால் சோகத்தின அறிகுறியான கண்ணீர் சுரக்கிறது- ஆனந்தக்கண்ணீர் அது.

இனி, பிரிவாற்றாமையால் வருந்தும் தலைவி பிறருடன் சினப்பாள், சீறுவாள், தலைவனுக்கு என்ன ஆயிற்றோ என்று பயப்படுவாள்; பாலே கசந்துவிடும். உணவில் அருவருப்பு உண்டாகும்; பைத்தியகாரி போல நடந்துகொள்வாள். கோபம், பயம், அருவருப்பு, ஹாஸ்யம் முதலிய ரஸங்களும் தோன்றிவிட்டன. இவை எல்லாவற்றுக்கும் மேலாக தலைவன் வருவான் என்றஎண்ணத்தால் உண்டாகும் இன்ப உணர்ச்சி தலைதூக்கி நிற்கும்.

ஆகவே, சிருங்காரத்துக்குள் மற்ற எல்லா ரஸங்களும் பின்னிக் கிடக்கின்றன

வஸந்த ருது, பூந்தோட்டம், ஆபரணங்கள், வாசனைத்திரவியங்கள், பிரியமானவர்களோடு கூடி அளவளாவுதல், இன்னிசை, கவிதை — இவையெல்லாம் சிருங்காரத்தோடு சம்பந்தப்பட்டவை. ஆயினும் தலைவன் - தலைவி உறவு அல்லது காதலே சிருங்கார ரஸத்தோடு மிகவும் நெருங்கிய தொடர்புடையது.

மேடையில், நெற்றி விரிதல், புருவம் வளைதல், உதடு மலர்தல், இன்பப் புன்னகை, ஆவல் நோக்கு, கடைக்கண் வெட்டு, மெல்லிய முகமன், வசீகரமான இன்குரல், பாட்டு, பரவசம் முதலியவற்றால் சிருங்கார ரஸத்தை உண்டுபண்ணலாம்.

கர்நாடக சங்கீதத்தில் சிருங்காரத்தை உணர்த்துவதற்கு எத்தனையோ பல ராகங்கள் உள்ளன. முக்கியமாக, பிலஹரி, கல்யாணி, கானடா, தர்பார், சண்முகப்பிரியா, காம்போதி முதலியவற்றைக் கூறலாம். (ஒரே ராகத்தில், சஞ்சார பேதங்களினால். வெவ்வேறு ரஸானுபவங்களை உண்டுபண்ணவும் முடியும்.) பதங்கள் எனப்படும் அபிநயப்பாடல்கள் அனைத்துமே சிருங்கார ரஸத்தை உண்டுபண்ணக் கூடியன என்று கூறலாம்.

ஹாஸ்யரஸம் சிரிப்பை அடிப்படையாகக் கொண்டது. இதிலும் இருவகை உண்டு. ஒன்று ஒருவர் தாமே ஹாஸ்யஉணர்ச்சியை வருவித்து தாமே சிரித்தல். மற்றது பிறரைச் சிரிக்க வைத்து பிறரிடம் அவ்வுணர்ச்சியை உண்டு பண்ணுதல்.

அலங்கோலமான உடை, அசங்கிதமான நடை, அநாவசியமான வார்த்தைகள், அங்கக் குறைவு, முதலியன ஹாஸ்ய ரஸத்துடன் சம்பந்தமானவை.

நகைச்சுவையில் எழும் சிரிப்பு அறுவகைப்படும்:- சிறுபுன்னகை (ஸ்மிதம்), புன்னகை (ஹசிதம்), மென்சிரிப்பு (விகசிதம்), ஏளனச்சிரிப்பு (உபகசிதம்). பெருநகை (அபகசிதம்), இடிநகை (அதிகசிதம்) முதல் இரண்டும் உயர்தர மக்களுக்கும், அடுத்த இரண்டும் நடுத்தர மக்களுக்கும், கடைசி இரண்டும் கீழ்த்தர மக்களுக்கும் உரியவை.

சுருட்டி, தன்யாசி, அமீர்கல்யாணி, அடாணு முதலிய சில ராகங்கள் ஹாஸ்யரஸத்தை உண்டுபண்ணவல்லன.

---

# உலகப்பெரியார்கள் அடிச்சுவட்டில் கென்னடி நடத்திய மனிதஉரிமைப்போராட்டம்

— ஜெயம் —

மனிதன் உலகத்தில் தோன்றிய நாள் தொடக்கம் தனது அடிப்படை உரிமைகளுக்குப் போராடவேண்டியிருந்தது. ஆதியில் மனிதன் உலகிலுள்ள மிருகங்களிலிருந்தும், இயற்கையின் சக்திகளிடம் இருந்தும் தப்பி உயிர்வாழப் போராடினான். அதில் வெற்றி கண்டான். மிருகத்தையும் இயற்கையையும் கட்டுப்படுத்தி வந்தான். இன்று அவன் உலகனைத்தையும் அடக்கிய பின் விண்ணையும் ஆராய முற்படுகிறான். ஆனால் மனிதருள் ஆதிக்கம் பெற்றவன் தன் சக பாடிகளை நசுக்கி தன் இஷ்டப்படி நடக்க முயல்கிறான். இதன் விளைவாக மனிதரிடைய பலமிக்கோன் பலவீனனையும், பணக்காரன் வறியவனையும், அந்தஸ்தில் உயர்ந்தோன், அந்தஸ்தில் குறைந்தவனையும் ஒடுக்கி ஒதுக்கி நடத்துகிறான்—மனிதன் ஆறறிவு படைத்தவனாயிருந்த பொழுதும் ஐயறிவு உள்ள மிருகங்கள் போல் நடாத்தப்பட்டு வருகிறான்.

இம் முறையில் நடாத்தப்பட்டு வருவதை நல்லெண்ணமும் பரோபகார சிந்தை படைத்த தெய்வ குணமும் உள்ள சீலர்கள் காலத்துக்குக் காலம்தோன்றி சீர்திருத்த முற்பட்டனர். இவ்வழித் தோன்றினோர் தான் முகமதுநபி, கிறீஸ்து நாதர், கிருஷ்ணர், காந்தி, ஏபிரகாம் லிங்கன் ஆவர். இவர்கள் அடிச்சுவட்டில் சென்ற ஒருவராக நம் காலத்தில் வாழ்ந்த கென்னடியையும் சேர்த்துக் கொள்ளலாம். இவர்கள் தம்நாளில் அறநெறி வழி நின்று அநீதியைக் கண்டித்து நீதிக்காகப் போராடி தமது உயிரையும் அர்ப்பணித்துள்ளனர். இவர்களின் உள்ளத் தத்துவம் "ஊர்ந்துபோகும் கட்டெறும்பிலும், சேர்ந்து வாழும் ஜீவராசிகளிலும் இருக்கும் ஆன்மா இறைவனே" என்பதே. இதை அடிப்படையாகக் கொண்டுதான் மக்களிடம் வேறுபாடு, பாகுபாடு இருக்கக்கூடாதென்று வாதாடினர். அவர்களுக்குக் கிடைத்த பரிசு துன்பமும், மரணமுமே. ஆனால் அவர்கள் ஏற்றிய தீபம், தொடுத்த அடிப்படை உரிமைப் போராட்டம் விடாது நடந்துகொண்டேயிருக்கும். இப் பெரியார்களின் தத்துவத்தைக் கொண்டே இன்று உலகில் உள்ள சகல சங்கடமான பிரச்னைகளுக்கும் தீர்வு காணும் ஐக்கிய நாட்டு ஸ்தாபனமும் மனிதனின் அடிப்படை உரிமைகளுக்காக வாதாடவும், பரிசீலனை செய்யவும் ஒரு குழுவை நியமித்தள்ளது.

ஜனநாயக ரீதியில் செயற்படும் நாடுகளில் பெரும்பான்மையினரின் தீர்ப்புதான் சரியானதென்னும் தப்பெண்ணம் நிலவி வருகிறது. மக்கள் ஆட்சி என்றால் அந்நாட்டில்வாழும் பெரும்பான்மையினரின் விருப்பமே நியாயமானதென்னும் அபிப்பிராயம் நிலவி வருகிறது. இது உண்மையல்ல. ஜனநாயக ஆட்சியில் பெரும்பான்மையினரின் எண்ணமே நிலவும் சமயம் சிறுபான்மையினர் கஷ்டத்துக்குள்ளாக்கப்பட கூடாது என்பதுதான் தர்மம். இவ்வுண்மை பொய்யாதிருக்கவே சிறு பான்மையினருக்கு எதிராக பாகுபாடு காட்டும் நடவடிக்கைகள் நிலவும் சமயம் அதனைப் பரிசீலனைசெய்ய ஒரு உபகுழு ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தில் இருந்து வருகிறது. இப்பிரச்னைகளைத் தாமாகவே தீர்த்துக் கொள்ள முயற்சிக்கும் பட்சத்தில் சில இடைஞ்சல்கள் நேரக் கூடும். நீதி என்னும் பீடத்தில் சில தியாகிகள் உயிர்விட வேண்டி நேரிடும். அண்மையில் அமெரிக்காவில் டெக்ஸாஸ் நாட்டில் வசிக்கும் மக்களில் 12 விகித காப்பிரியருக்கு பாகுபாடின்றி குடியியல் உரிமைகள் கொடுக்கப்பட வேண்டுமென காலஞ்சென்ற ஜனாதிபதி கென்னடி வாதித்துவந்தார். ஜனநாயக ஆட்சி அமெரிக்காவிற் சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் உண்மையில் நிலவி வருகிறதென்பதற்குச் சான்றாக ஐக்கிய அமெரிக்க நாடுகளில் கத்தோலிக்கர் ஒருவரை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்ததுடன் நின்றுவிடாது முற்போக்கான, நீதியான விடயங்களில் தமது பிடிவாத குணங்களை விட்டு நடந்து வருகின்றனர். ஒவ்வொரு சுற்றுடலிலும் கோடரிக்காம்பு போல் ஒருவர் இருப்பது போல், அல்லது சந்திரனில் மறு இருப்பது போல் இவ்வளவில் ஜனநாயக ஆட்சியில் முன்னேறிச் செல்லும் அமெரிக்காவிலும் பிற்போக்கான ஒருசில கும்பல் இருந்து வருகிறது. இத்தகைய பிற்போக்குச் சக்திகளுடன் தொடர்புள்ள பாதகனின் குண்டுக்கு இலக்கானார் மனித சமுதாயத்தின் சுதந்திர வீரன் கென்னடி. இருந்தும் அமெரிக்க மக்கள் தமது சகோதரரான நீக்ரோவருக்கு குடியியல் உரிமைகளைக் கொடுத்தே தீர வேண்டுமென்னும் மனப்பான்மை உள்ளவராகி வருகின்றனர். இவற்றைப் பார்த்துச் சகிக்க முடியாத சக்திகள்- ஆதிக்க வெறிபிடித்த கும்பல்களும், நாடுகளும் மனிதனின் அடிப்படை உரிமைப் பிரச்னைகளைத் தீர்வு காண வழி விடாது முட்டுக்கட்டைகள் போடுகின்றன. மனிதனின் அடிப்படை உரிமைகள் வழங்கப்படும் இடங்களில் சமாதானம், சகவாழ்வு நிலவுகிறது; மக்கள் ஆக்க வேலைகளில் ஈடுபடுவர்; நாடும் செழிக்கும்.

பெரும்பான்மையினத்தோர் தமது குறுகிய வகுப்புவாதத்தையும், மதத்துவேஷத்தையும் கட்டிக்கொண்டு தம்மினமே முன்னேற வேண்டும்என்னும் ஆசையை விட்டு நாடு வாழ, ஆன்மா சாந்தியடைய புத்தபிரானும் கிறிஸ்து நாதரும், திருவள்ளுவரும் காட்டிய வழி நின்று உயிர்களை இம்சியாது ஆட்சி நடத்தட்டும். உயிர்களை இம்சியாதிருந்தால் மட்டும் போதாது. ஒரு சாரார் இன்னொருசாராரை சம சந்தர்ப்பம் இன்றி வாழ சட்டம் இயற்றாது இருக்க வேண்டும். பாகுபாடு காட்டும் சட்டத்தை மனித உரிமைச் சாசனக் கர்த்தாக்களும், ஆதரவாளர்களும் முழுமூச்சுடன் எதிர்க்கத் தயங்கக கூடாது. மனித உரிமைச் சாசனப்பிரகடன தினத்தை வெகுவிமரிசையாகக் கொண்டாடி செயற்பட மக்கள் முன்வரவேண்டும். இம் முயற்சிகளில் எதிர்ப்புகள் மலை போல் வரும். இவற்றைக் கண்டு அஞ்சாது மனித உரிமைகாகப் போராடுபவனே, இப்போராட்டத்தில் மடிபவனே தியாக சீலன். எந்நாட்டவனாயினும், எவ் இலட்சியவாதியாயினும் மனிதனுககு மதிப்புக் கொடுத்து அவனின் உரிமைகளுக்காகப் பாடுபட வேண்டும்.



1963-ல் அதிமுக்கியம் பெற்ற திகைப்பூட்டும் செய்திக்குப் பாத்திரரான கென்னடி சென்ற ஆண்டில் உலக மகா புருஷர் எனவும் அழியாப் புகழ் பெற்றார்.

---

## தன்னை வென்ற...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சாதாரணமாக எல்லோரும் அறிந்த விஷயம்.

ஜனநாயகப் பண்பாட்டுக்கு ஊறு செய்யாமல் வேற்றுமை கண்டவுடன் மந்திரிப்பதவியை உதறி எறிந்த பெருமை திரு. பண்டாரநாயகா ஒருவருக்கே உரியது. 'நான் என்னை வென்றுவிட்டேன். ஆசையை அடக்கிவிட்டேன் பதவிமோகத்தை துறந்துவிட்டேன்' என்று அவர் தைரியமாகச் சொன்னார்.

திரு. பண்டாரநாயகா தம்மைத் தாமே வென்றது அன்று தான் முதல் தடவையல்ல. அதற்கு முன்பே அவர் சில தியாகங்களைச்செய்திருக்கிறார்.

பிரபுக் குடும்பத்தில் பிறந்து, அளவற்ற செல்வத்தில் தவழ்ந்து, இங்கிலாந்தில் மேற்படிப்பு படித்து இலங்கை திரும்பியவர் சுசாலான வாழ்க்கையைப் புறக்கணித்துவிட்டு சாதாரண மக்களுக்குத் தொண்டுபுரியும் கடினமான வாழ்க்கையையே தேர்ந்தெடுத்தார். வெள்ளைக்காரர் ஆட்சிக் காலத்திலும் மேனாட்டுடைகளைக் களைந்தெறிந்துவிட்டு தேசிய உடையாகிய வேட்டியும் சால்வையும் முதன்முதலாக அணிந்த பிரமுகர் அவரே தான். விரும்பியிருந்தால் அவர் இலங்கையின் தலைசிறந்த வழக்கறிஞராய் வந்திருக்கலாம் அல்லது சுப்ரீம்கோர்ட் நீதிபதியாகியிருக்கலாம். அல்லது ஒன்றும் செய்யாமல் சும்மாவீட்டில் இருந்துகொண்டே குபேர சம்பத்து அனுபவித்திருக்கலாம். அத்தகைய செல்வாக்கு படைத்தது அவர் குடும்பம். ஆனால் அவர் அந்த சொகுசு சீவியத்தை விரும்பாமல் அரசியல் கொந்தளிப்பில் புகுந்தார்.

பண்டாரநாயகாவின் மிகச் சிறந்த வரப்பிரசாதம் அவருடைய நாவன்மை. ஆள் குள்ளமாய் ஒல்லியாய் இருந்தாலும் அவருடைய குரல் கம்பீரமானது. கேட்போரை ஆகர்ஷிக்கும் மின்கவர்ச்சி நிறைந்தது ஒவ்வொரு வசன முடிவிலும் கடைசி இரண்டொரு வார்த்தைகளைத் திரும்பவும் சொல்லி அழுத்தமாக அறுதிவைக்கும் போது தூங்கிவழிந்துகொண்டிருக்கும் பிரதிநிதிகள் விழித்தெழுவார்கள். ஆங்கிலத்தில் புலமை மிக்க அவர் அம்மொழியில் ஆங்கிலேயரிலும் பார்க்க அழகாகப் பேசுவார்.

யூ. என். பி. மந்திரிசபையிலிருந்து அவர் பிரிந்த அன்றே இலங்கை அரசியலில் மாற்றம் ஏற்பட்டுவிட்டதென்று கூறலாம். உடனே ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை நிறுவினார்.

எவரைத் துணைக்கொண்டாவது யூ. என். பி. யை முறிய

(10-ம் பக்கம் [illegible])

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் சோபகிருது ஆண்டு மார்கழிமீ 21உ (5-1-64)

# மக்களும் அரசாங்கமும்

மக்களுக்காக அரசாங்கமா, அரசாங்கத்துக்காக மக்களா? மக்களுக்காகத்தான் அரசாங்கம் என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள்.

இதை எந்த அரசாங்கமும் உணர்ந்து மக்களுக்குத் தங்களாலான நன்மைகளைச் செய்ய வேண்டுமென்று ஆர்வங்கொண்டு ஏதேதோ செய்கின்றது.

ஒருபுறம் அரசாங்கம் எல்லாவற்றையும் படிப்படியாக "தேசிய மய" மாக்கி வருகையில், பொது மக்களும், தங்களுக்கான எல்லாக் காரியங்களையும் அரசாங்கமே செய்யுமென்றும், தாங்கள் ஒன்றுமே செய்யத்தேவையில்லை என்றும் கருதி எவ்வித முயற்சியிலும் ஈடுபடாமல் எதற்கும் அரசாங்கத்தையே எதிர்பார்த்திருக்க வேண்டுமென்ற ஆபத்தான மனப்பான்மையை பார்த்துக்கொள்ளக் கூடியதாகவுள்ளது.

மக்களுக்குத் தேவையானதையெல்லாம் அரசாங்கம் செய்யமுடியுமானல் நல்லது தான். ஆனல் அானல் அது முடியுமா? இக்கேள்விக்கு பதிலளிக்கு முன் அரசாங்கம் என்றால் என்ன, அதை நடத்துவது யார், அவர்களது சக்தி எவ்வளவு என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும்.

அரசாங்கத்துக்கு அதிக சக்தி இருப்பினும், அது சர்வ வல்லமையாகிவிட முடியாதென்று தஞ்சையிலே கூடிய சர்வோதய மகாநாட்டில் அண்ணன் ஜகந்நாதனவர்கள் ஓர் உதாரணத்தின் மூலம் நன்கு விளக்குகின்றார்.

மக்களுக்கு ஒரு பிரார்த்தனை மண்டபம் தேவை என்று வைத்துக்கொள்வோம். பொறியியல் வல்லுநர், சிமிந்தி, பணம் இவற்றைக் கொடுத்து அரசாங்கம் உதவலாம் அல்லது அரசாங்கமே அந்த மண்டபத்தைக் கட்டித் தரலாம். ஆனல், அதே அரசாங்கத்தால், பிரார்த்தனை போன்ற இதர வேலைத் திட்டங்களை வகுத்து பிரார்த்தனையை நடத்தி வைக்க முடியுமா! அதற்கான தகுதி உண்டா?

உண்டென்று கூறுவதாக வைத்துக்கொண்டால் அது எவ்வாறு செயல் படுத்தும்? பிரார்த்தனை மண்டபத்துக் கேற்ப, பிரார்த்தனை தாசில்தாரை அரசாங்கம் நியமிக்கும். அவருக்கு காரியாலயமும், சிப்பந்திகளும் ஏற்படுவர். "பிரார்த்தனை ஸ்பெஷலிஸ்ட்" ஒருவரை சிருஷ்டித்து, அமெரிக்கா போன்ற தேசங்களுக்கு அவரை அனுப்பி வைப்பர். அவர் திரும்பி வந்து ஒரு நூல் எழுதுவார். விதிகள் பல உருவாகும்.

"பிரார்த்தனையில் கலந்து கொள்பவரின் வயது, வருமானம், உயரம், கனம், நாக்கு, மூக்கு இவை பற்றிய விவரங்களை நமூனக்களில் பூர்த்தி செய்ய வேண்டும். அவர்களுக்கு "யூனிபாரம்" உண்டு. இச் செலவில் 65 சதவிகிதத்தை அரசாங்கம் ஏற்கும். மூன்று தவணை பிரார்த்தனைக்கு ஆஜராகாதவரின் பெயர் பட்டியலிலிருந்து நீக்கப்படும். இவ்வாறு விதிகள் திரண்டு அவை "பிரார்த்தனை புரொசீஜர் கோடு" என்ற புத்தகம் உருவாகும்.

"பிரார்த்தனை சமயத்தில் இடம்மாறி உட்காருபவர்களைக்கண்காணிக்க மதுவிலக்கு பொலிஸ்போல், "பிரார்த்தனை பொலிஸ்" நியமிக்கப்படுவார்கள். பிரார்த்தனை தாசில்தார் மாதந்தோறும் அரசாங்துக்கு அறிக்கை அனுப்புவார். அசம்பிளியில் எழுப்பும் கேள்விகளுக்கு மந்திரிகள் பதில் கூறுவதற்கு ஏதுவான புள்ளி விவரங்கள் 'சப்ளை' செய்வார்!

"இத்தனை காரியங்களுக்கும் மத்தியில் ஐயகோ!, ஐயகோ! பிரார்த்தனை மாத்திரம் நடைபெற மறந்து போகும்" என்று கூறி அரசாங்கம் தன் சக்தியின் அளவை உணராமல், மக்கள் வாழ்க்கையில் எல்லைமீறி அதிகம் தலையிட்டு, மக்களின், சக்தியை அழித்து, பாழ்படுத்துவதாயும் எதற்கும் அரசாங்கத்தையே எதிர்நோக்கும் ஓர் அபாயத் தன்மையை மக்களிடை வளர்ப்பதாகவுமிருக்குமென்கிறார் திரு. ஜெகந்நாதன்.

மக்களின் சக்தியைப் பரிபூரணமாகப் பயன்படுத்தக்கூடியதாக இருந்தால்தான் நாடும் மகிழ்ச்சியாக வளர முடியும். அரசாங்கத்தில் சம்பளத்துக்காக வேலைபார்க்கும் ஊழியர்களைக் கொண்டு எல்லாவற்றையும் வெற்றிகரமாக நடத்தி விடமுடியாது. மக்களின் வாழ்க்கை சுதந்திரத்தில் கூடுமானவரை குறுக்கிடாமல், பல முயற்சிகளிலும் மக்கள் உற்சாகமாக ஈடுபட வசதி செய்ய வேண்டும்.

மனிதரை மனிதர் சுரண்டாமல் பார்த்துக் கொள்ளவேண்டிய அரசாங்கம், மனிதரின் வாழ்க்கைச்சுதந்திரத்தை எக்காரணம் பற்றியும் பறித்துவிடக்கூடாது.

# மனதை தூய்மைப்படுத்தும் பக்திப் பாடல்கள்

## குழந்தைகளிடம் தெய்வீக உணர்ச்சி கழயவேண்டும்

தினசரி நாம் குளிக்கிறோம். சரீரத்தில் உள்ள அழுக்கை போக்கிக்கொண்டு குளித்த பின்னர் தூய ஆடைகளை உடுத்திக் கொள்கிறோம். கந்தையானாலும் கசக்கிக்கட்டு என்ற முதுமொழிக்கேற்பகந்தல்துணியானாலும் நன்றாக வெளுத்துத்தான் கட்டிக்கொள்ள விரும்புகிறோம். உடம்பு அசௌகரியமாக இருப்பினும் முகத்தையாவது சமூவிக்கொண்டு நெற்றியில் விருப்பமான சின்னத்தைத் தரித்துக் கொள்கிறோம். ஆகையால் நாம் சுத்தமாக இருக்கவிரும்புவதுடன் பிறரும் அவ்விதமிருக்கவே ஆசைப்படுகிறோம்.

இதைப்போல் நாம்விளையாட்டாகப் பொய் சொல்லுவதும் ஏமாற்றுவதும் வாய்க்கு அசுத்தம். உள்ளத்துக்கும் அழுக்கு. மனதால் பிறருக்கு தீங்கு நினைப்பதுமே மனதை மாசுபடுத்துகிறது. உடல் அழுக்கு நமக்கு கண்ணுக்குத் தெரியும். உடுத்தியிருக்கின்ற தூய்மையான ஆடையில் ஒரு சிறு கறைபட்டாலும் நாம் அவதிப்படுகிறோம். ஆனல்நாம் மனதில் நினைக்கக்கூடியகெடுதல் பிறர்க்குத் தெரியாது. ஆனல் நம் உள்ளத்தையும் கடந்து இருக்கும் கடவுள் காட்சி பூதமாக இருந்துகொண்டு பலாபலன்களை ஆராய்ந்து நமக்கு மானதீனமான கஷ்டங்களைக் கொடுத்து விடுகிறார். இவைகளையெல்லாம் தடுப்பதற்கு ஒரேவழி இறைவனை அறியவேண்டியதாகும். இறைவனை அறிவதென்பது அவ்வளவு எளிதல்ல. ஆகையால் இறைவனைப் பற்றிய பாடல்களைப் பாடுவதால் வாக்கு, கருத்து சுத்தப்படுகிறது. முருகன், கண்ணன் முதலிய திருவுருவப் படங்களை தியானம் செய்வதால் இறைவனின்நோக்கம் நம் மனதில் படிந்துவிடுகின்றது. நல்ல எண்ணத்தையே நினைவூட்டும் ஞாபகமும் நல்லகாரியம் ஒன்றும்பயனளிப்பதில்லை. செய்யக்கூடிய எந்த சிறிய தொண்டும் உண்மையாகஇருப்பின் அதுவே போதுமானது. தூய்மையல்லாத எந்தப்பெரிய காரியமும் வேதனையைத்தான் உண்டுபண்ணும்.

இறைவனின் திருநாமத்தையும் நாமங்களையும் பேசக்கூடிய பல பாடல்களில ஒரு சிலவற்றையாவது மனப்பாடம்செய்ய வேண்டும். நாயன்மார்களும், ஆழ்வார்களும் தங்கள் பக்தியின் அதிசயத்தால் பலஆயிரக் கணக்கான பாடல்களை இயற்றியிருக்கின்றனர். பல இராக, மெட்டுகளிலும் பலதரப்பட்ட வர்ணனைகளுடன் கூடிய செய்யுள்களை தம் பின் சந்ததிகளாகிய நாம் ஒரு சிலவற்றையாவது பாடி தெய்வீக உயர்வை ஏற்படுத்திக் கொள்ளமாட்டோமா என்ற எண்ணத்துடனே தான் அருளிச்செய்திருக்கின்றனர் தாயும்தந்தையுமாய் இருக்கின்ற கடவுளைப் பற்றிய பாடல்களை மனனம் செய்வதால் தன் இறைவனின் திருவருள் கிட்டும். மானசீகமாக ஏற்படக்கூடிய கஷ்டங்கள் தீரும்.

இந்த உயர்வு ஏற்பட வகை செய்யவேண்டிய பெரும் பொறுப்பு ஆசிரியர்களையும் பெற்றோர்களையும் சாரும். சமுதாய வாழ்க்கை இதர வெளிவிவகாரங்களைப்பற்றிப் போதிக்கும் ஆசிரியர்கள் தெய்வீக சம்பந்தமான நூல்களைப் பற்றியும் பாடல்களையும் ஒருசில நிமிஷங்களுக்காவது போதிக்க வேண்டும். சமுதாயத்தில் முன்னேறக்கூடிய பாதையில் இளம் மாணவர்களை இழுத்துச்செல்லும் ஆசிரியர்கள் எந்த ஆபத்துக் காலத்திலும் உதவக் கூடியதும் ஏனைய துன்பங்களிலிருந்து விடுவிக்கக்கூடியதுமான ஈசுவரனின் அருளடையச் செய்யக்கூடிய பாடல்களைப் பாடச்செய்வது தான் கடமை.

இந்த எண்ணத்தை மனத்தில் கொண்டுதான் குழந்தைகளைத் திருப்பாவை, திருவெம்பாவை பாடல்களை இளம் பராயத்திலேயே மனனம் செய்யத்தூண்டுகிறோம். இந்தத் தூண்டுதல் குழந்தைகளுக்கு மற்ற தெய்வீக சம்பந்தமான தோத்திரங்களையும் அறிய ஊக்குவிக்கும். பெற்றோர்களுக்கும் இதில் பங்கு உண்டு. குழந்தைகளுக்குத் தெய்வீக உணர்வு ஏற்பட வகைசெய்ய வேண்டும்.

சுத்த வெளுப்பான உருவத்தை உடையவன் சிவபெருமான். தபசினல் ஜொலிக்கக் கூடிய அம்பிகையின் நிறம் சிவப்பு. இவர்களின் நினைவு நமக்கு எப்பொழும் ஏற்பட, நாம் நெற்றியில் அவரவர் கலாச்சாரப்படி திருநாமமோ, நீறோ அல்லது குங்குமமோ தரித்துக்கொள்ள வேண்டும். "நீறில்லா நெற்றிபாழ்" என்பது மூத்தோர் வாக்கு. எப்படி பாழுங்கிணற்றில் தண்ணீரானது பிரயோசனமற்றதாகின்றதோ அதுபோல வெறும் நெற்றியுடன் எந்த நல்லகாரியங்களும் செயலாற்றுவதற்குத் தகுதியில்லை. அவர்களுக்கு இறைவனின் அருளும் கிட்டுவதில்லை,

தெய்வீக நினைவுடன் இறைவனின் திருநாமஸ் மரணையில் தான் தைரியமும் உள்ளத்தில் நிறைவும் ஏற்பட்டு நல் வாழ்க்கை நடத்தமுடியும்.

[கும்பகோணத்தில் நடைபெற்ற பாவை மகாநாட்டில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் (புதிய பெரியவா) நிகழ்த்திய அருளுரை.]

## ஆண்மையில்...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

பண்புகள் இரண்டும் ஒரேவழியில் ஒருங்கே ஒரே போழ்தில் உண்டாவதை நாம் அறிவோம். எனவே அவர்கள் பால் அச்சம், அஞ்சாமை ஆகிய இருஇயல்புகளுக்குமுரிய இரு மூலப் பண்புகள இருக்கவேண்டுமென்பது துணியப்பட்டது. எனவே அம்மூலப் பண்புகள் பெண்மையும் ஆண்மையுமாகும்; அவையிரண்டும் ஆண், பெண் பாலார் இருபகுதியாரிடத்தும் ஒருங்கே அமைந்துள்ளன என்பது பெறப்படும். அவ்வாருகவே நன்னெறியோம்பிப் பெண்மையின் வயப்பட்டு அச்சம் எழ. அந்நெறியைக் காக்கவே ஆண்மையின் வயப்பட்டு அஞ்சாமை எழுவதாகும்; ஆகவே அச்சமும், அஞ்சாமையும் ஒன்றிற்கொன்று எதிரானவையான போதும் அவையிரண்டும் ஒரே வழியில் கருமமாற்றுகின்றன. இவ்வியல்பே நல்ல முறையில் பயின்ற பெண்மைக்கும் ஆண்மைக்கும் உள்ள எடுத்துக் காட்டாகும்; எனவே ஆண்மையும் பெண்மையுமே வாழ்க்கையின் இரு பெரும் பண்புகள் என்பது தாமே பெறப்படும். இதனல் நாம் இப்போது அறியக்கூடியது பெண்மகளிரிடத்து பெண்மையும் ஆண்மையும் விரவியுள்ளது என்பதும், அவ்வாறே ஆண்மகனிடத்து ஆண்மையும் பெண்மையும் விரவியுள்ளது என்பதும் ஆகும். அப்படியானல் பெண்மையுடையான் பெண்ணுக்கு ஆண்மையின் இயல்பு உண்டாமா? அஃதெப்படி? என ஐயம் எழலாம்; அஃது அறியாமை; பெண்மகளிர்க்குப் பெண்மையின் ஆண்மையும், ஆண்மக்களுக்கு ஆண்மையில் பெண்மையும் தம்முட்கலந்து சூழ்ந்து பிரிவின்றிச் சிறந்து விளங்கும். அதன் விரிவைப் பின்னர் விளக்குவாம்.

உருவகக்

## உருவகக் படைப்பின்

கலைஞன் தன் கைவண்ணத்தால் அந்த ஓவியத்தை ஓர் உயிர் ஓவியமாகப் படைத்திருந்தான். சாதாரண தூரிகையால் பல வர்ணக் குழம்புகளைக்கலந்து சித்திரிக்கப்பட்ட அதில் தன் "பிரமாத்துவ"த் திறமையைக் காட்டியிருந்தான். ஆம்! அந்தச் சித்திரம் வெறும் கோடுகளும் ரேகைகளுமாயிராமல் உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கும் உயிர் ஓவியமாகவே காட்சி அளித்தது.

எங்கும் பச்சைப் பசேலென்ற தாவரங்கள் செழிப்பாக வளர்ந்து குளு குளு வென்று முறுவலுடன் சிலிர்த்து நிற்கின்றன. அவற்றை அடுத்து வானளாவி நிற்கும் மலை முகடு; அதிலிருந்து வழிந்தோடுகிறது பால் வெண் சிற்றருவி. அதிலிருந்து சுரக்கும் நீரை மொண்டு வாழும், அயலிலுள்ள செடி, கொடிகள் வனப்புடன் திகழ்கின்றன. இரசிகனின் கண்கள் குளிர இயற்கை ரம்மியமாகச் சிருஷ்டிக்கப்பட்டுள்ளது. இந்த அமைதியான சூழல் யாருக்குத் தேவையானது? இதில் பள்ளி கொள்ள வேண்டியவர் யார்? இத்தகைய கேள்விச் சுமைகள் நிச்சயம் அச்சைத்திரீகனின் மனதில் எழுந்திருக்க வேண்டும். புதியது புனையும் அவன் சிந்தை எப்போதும் புதுமைக்கே இடமளிக்கும். உலகனைத்தையும் நிர்வகிக்கும் ஒருவர் அவருக்கே அமைதியான சுற்றாடல் வேண்டும். அவன் தூரிகை வரைந்து விட்டது. கருணை ஒளி சுரக்கும் அமலனை தீமை செய்யும் பாம்பை தன் அணியாகக் கழுத்தில் அணிந்து, புலித்தோல் ஆசனத்தில் கட்டுடல் கொண்ட தேவன் அமைதியாக வீற்றிருக்கிறார். அவர் முகத்தில் ஒரே அமைதி-அல்லாவிடில் இஞ்ஞாலத்தோர் திருக்கூத்தைக் கவனிக்க முடியுமா?

அலகிலா விளையாட்டுடையானின் முன் பக்தர்கள், அர்ச்சனைப் பொருட்களைக் குவித்து வைத்திருக்கின்றனர் தன்னைத்தானே தியாகம் செய்து மற்றையோருக்கு நன்மை பயக்கும் ஊதுபத்தியிலிருந்து 'கமகம' வென்ற வாசனை எழுந்து எங்கும் பரந்து விகசித்து காற்றில் மிதக்கிறது.

வெப்பத்தால் நீர் வற்றிப் போய்விட்டாலும் வாழை இலை பசுமைப் பொலிவு குன்றாமல் திகழ்கிறது. அதன் மேல் புடம் இட்ட தங்க நிற வாழைப்பழங்கள் நிரைநிரையாக வைக்கப் பட்டுள்ளன.

உருக்கி வார்த்த தங்கமென மின்னும் அந்த வாழைப் பழங்களுக்கு ஒரே குதூகலம். அல்லாது போனல் அந்தப் பொன் நிறம் அவைக்கு எப்படி கிட்டியிருக்கும். இலைக்கோ தூக்க முடியாத சுமை. அது ஒரு பக்கமாய் சுருண்டுவிட்டது. பாரம் அதிகமாயிருப்பதால் வாய் திறக்க முடியாத வேதனை அதற்கு. எங்கோ இருந்த மானம், துணிவு எல்லாம் ஓடோடி வந்து அதற்குக் கை கொடுத்து உதவுகின்றன. சற்றுக் கனைத்துவிட்டு-:

"அம்மாவோடு சந்தோஷமாயிருக்க விடாமல், அவவைக் கொன்று, எங்களைப் பிரித்து வைத்த நீ இங்கேயும் வந்து ஏன் துன்பத்தைத் தருகிறாய்?" என்றது இலை.

மகிழ்ச்சிப் பெருமிதத்தில் தன் கற்பனையை எங்கெல்லாமோ செலுத்திக்கொண்டிருந்த பழத்திற்கு இச் சுடுசொல காதில் படிகிறது.

"நான் அம்மாவைச் சாக வைத்தேன. என்னை ஏன் இப

யாழ்ப்பாணம், ஞாயிறு சித்தன்கேணி ஸ்ரீ மகாகண பதிப்பிள்ளையார் கோவில் பன்னிரு திருமுறை விழா நேற்று ஆரம்பமானது. இன்றும் தொடர்ந்து நடைபெறும். இவ்விழாவில் சொற்பொழிவுகளும், இசைக்கச்சேரிகளும், ஆராதனைகளும் இடம்பெறுகின்றன.

கதை

# நியதி

படிப் பிரித்துவைத்துக் கொடுமைக்காரி ஆக்குகிறீர்கள்?"

"மாய்மாலக் காரியல்லோ நீ நீ வந்த பிறகுதானே அவ செத்தவ நீ யமன்"

"ஆ ...!"

பழத்திற்கு இதயம் நிறைந்த வேதனை.

"என்ன ஆ ... போடுறாய்?"

இலையின் குரலில் கோபமும் கேலியும் கலந்தொலித்தது.

"என் அன்னை, செத்தும் கொடை கொடுத்தாள் என்ற புகழ்மாலையை அவளுக்குக் கொடுத்து, நான் இன்னும் ஆண்டவனின் முக்கனிகளுள் ஒன்றாக இருந்துவருகிறேன். என்னை ... இப்படி எமன் கிமன் என்றெல்லாம் ஏன் கரித்துக் கொட்டுகிறீர்கள்."

"செத்த பிறகு, புகழ்வந்தென்ன விட்டென்ன" இலை மிகவும் கடுமையான தொனியில் பொழிந்தது.

கல்லினுள் தேரையின் பசியை அறிந்து அதற்குக் கருணை புரியும் ஆண்டவன் மனிதனைவிட இன்னுமோர் நயமாத்தை அதிகமாக கொண்ட அமலனுக்கு தன் முன் நடக்கும் சண்டை எப்படித் தெரியாமலிருக்கும்? தன் மக்களின் குழப்பத்தை விடுவிக்க அவர் வாய் திறந்தார்.

"குழந்தைகளே! சண்டைபிடியாது அமைதியாக இருங்கள்" அவர் அதரங்கள் உதிர்த்த முத்து நிகர் வார்த்தைகள் இவை.

போர் நின்றது. எங்கும் அமைதி. "உங்கள் பேச்சை நான் இதுவரையில் செவிமடுத்துக் கொண்டுதானிருந்தேன்" நீதிபதியின் முன் அடங்கி, ஒடுங்கி நிற்கும் நிலையில் இலையும் பழமும் அமைதியாயிருந்தன.

"இலை, நீ உன் தாயை நினைந்து மிகவும் கவலைப்படுகிறாய். ஆனால் அதற்காகப் பழத்தைக் குறை கூறுவது தப்பு. நீ எனக்கு முன் இருப்பதற்குத்தான் பாக்கியம் பெற்றாய். ஆனால் பழமோ எனக்கு அமுதாக உதவுகிறது. அதை எமக்களித்த உன் தாயின் சேவையை யான் மறவேன்.

இறைவனின் வார்த்தைகள் இரண்டினது மனதுளும் புகுந்து அவைகளைச் சிந்திக்கத் தூண்டின. இலை-சினங்கொண்டு சிவந்திருந்த அதன் முகத்தில் சாந்தம் தவழ்ந்தது. பழம்-தன் தாயை மற்றையோர் போற்றுமளவுக்கு,தான் நன்மை புரிந்து அவருக்குப் புசிப்பூட்டிக் கொடுத்துவிட்டேன் என்று பூரித்தது. குவிந்திருந்த அதரங்களை ஆண்டவன் மீண்டும் திறந்தார்.

"தாயை இழந்த சேய்களின் தவிப்பை நான் நன்கறிவேன். ஆனாலும் ஆக்கப்பட்ட பொருள்கள் அனைத்தும் அழிக்கப்படுவன, என்னும் நியதிக்கு யாரும் விதிவிலக்காகமாட்டார். இதை மனதிற்கொண்டு உங்கள் வாக்குவாதங்களை நிறுத்திச் சமாதானமாக வாழுங்கள்."

ஆண்டவனின் அதரங்கள் மீண்டும் மூடின்தன, தன் அறியாமையை உணர்ந்த இலை, பழத்தை ஆலிங்கனம் செய்யும் பொருட்டு அமலன் சிறிது காற்றை வீசச் செய்தான். காற்றினால் மேலெழுந்த இலை பழத்தைத் தழுவிற்று. அவைகளை இடையில நிலவிய வேற்றுமை ஒழிந்தது. இப்போ அவைகள மத்தியில் சகோதரத்துவம் நிலவுகிறது.

--மா. பாலசிங்கம்.

# உலக மேடை

டி. எம். எம்.

# இலங்கை சரித்திரம் மாறுகிறது: தமிழ்மொழி நிலைமை

## அரியாசனத்தில் சிங்களம்

1964-ம் ஆண்டு ஜனவரி முதல் திகதி இலங்கைச் சரித்திரத்தில் மறக்க முடியாத தினம். ஆட்சி மொழியாகச் சிங்களம் அரியாசனம் ஏறிய தினம். ஜனநாயகம் என்ற பெயரால், பெரும்பான்மையினர் கூடி, சட்டம் மூலம் சரித்திரத்தை மாற்றி விட்டதினம். இது ஒரு சரித்திர மாறுதல்.

ஆனால் எந்தச் சரித்திர மாறுதலும் இறுதி முடிவு அல்ல என்பது வரலாறு கற்பிக்கும் பாடம். வெறும் சட்டத்தினால்சரித்திரத்தை மாற்ற முடியாது என்பதையும் அதே வரலாறு காட்டுகிறது. மனமாற்றமே உண்மையான சரித்திர மாற்றமாகும்.

தமிழர்களைப் பொறுத்தவரை 1964-ம் ஆண்டு ஜனவரி முதல் திகதி, ஒரு கரிநாள். தெய்வத்தேமொழியாம் தமிழ், விதவையாக்கப்பட்ட தினம். துரியோதனன் சபையில் திரௌபதி துகிலுரிக்கப்பட்டதுபோல், தமிழனை இப்போது துகிலுரிக்கப்பட்டான். அன்று கண்ணபிரான் திரௌபதியின் மானத்தைக் காத்தார். இன்று தமிழனையின் மானத்தைக் காப்பது யாரோ?

★

## தமிழின் பெருமை

தமிழர்களுக்கு முதலில் கடவுள். அடுதது தாய்மொழியே அவர்களது உயிர். தொன்மையான தங்கள் மொழியை அவர்கள் வாழ்க்கையின் சகல அம்சங்களிலும் புகுத்தியிருக்கிறார்கள். உலகைப் பாலித்திருக்கிறார்கள். சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தார்கள். முதற் சங்கமும், இடைச்சங்கமும், கடைச்சங்கமும் தமிழர்களின் புலமையை உலகுக்கு எடுத்தோதின. கடவுளின் மொழியாகத் தமிழ் வருணிக்கப்படுகிறது. முருகக் கடவுள் அகஸ்தியருக்குத் தமிழில் உபதேசித்ததாக ஐதீகம். ஆழ்வார்களும், நாயன்மார்களும், புலவர்களும் ஆயிரக்கணக்கான புலமைகளை தமிழில் வெளியிட்டிருக்கினார்கள்.

திராவிட நகரிகத்தின் சின்னமாக ஹரப்பாவும், மொகஞ்சதாரோவும் விளங்குகின்றன. சிந்துநதிப் பள்ளத்தாக்கில் தோன்றிய ஆதி நாகரிகத்தின் சின்னங்களில் ஒன்று, திராவிட மொழி. திராவிடம் என்ற மொழியே திரமிளம், தமிளம், தமிழ் எனத் திரிந்ததாக ஆராய்ச்சியாளர் முடிவு.

தமிழ் மன்னர்கள் இமயமலைவரை, சாவகம்-சண்பகம்-புட்பகம் வரை படையெடுத்துச் சென்று வெற்றிவாகையுடன் திரும்பினார்கள். சென்ற இடங்களில் எல்லாம் தங்கள் மொழியையும், கலாச்சாரத்தையும் கொண்டு சென்றார்கள். ஆலயங்களை நிலைநாட்டினார்கள. கடல் கொள்ளப்பட்ட லெமூரியாக் கண்டம் முழுதும் தமிழாதிக்கத்தில் இருந்தது. இபபடியெல்லாம் வரலாற்றுப் புகழ்படைத்தது தமிழ் மொழி. லததீனையும், சமஸ்கிருதத்தையும் போல தமிழும் புராதன மொழிகளில் ஒன்று.

★

இப்பேர்ப்பட்ட புராதன மொழி. இன்று இலங்கையில் ஒதுககப்பட்டிருக்கிற தென்றால் அதற்குத் தமிழர்களின் துரதிருஷ்டமே காரணம். மொழிப பிரச்னை, வாழ்வுடன் சம்பந்தப்பட்ட பிரச்னை. மொழி, மதம், பண்பாடு ஆகியன சமுதாயவாழ்வின் அடிப்படையாகும். இவ்வளவு பெரிய அடிப்படைப் பிரச்னை, அரசாங்கத்தால் சரியாக அணுகப்படவில்லை என்பதை மறுப்பதற்கில்லை. எந்த ஒரு அரசாங்கமும் ஒரு சமுதாயத்தின் வாழ்வை, பொறுப்பின்றி, இவ்வளவு துரிதமாக, ஒருதலைப் பட்சமாக நிர்ணயித்துவிடமுடியாது. இதற்குக் காரணமானவர்கள் சரித்திரத்தால் சபிக்கப்படுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

சிஙகளம் மட்டும் சட்டத்தை இவ்வளவு அவசரப்பட்டு ஒரு தலைப்பட்சமாகத் தமிழர்களின் மீது திணிக்கமுயன்றிருபபது போன்ற தவறை, இலங்கையில் இதுவரை எந்த அரசாங்கமும் செய்ததில்லை.

★

## இந்தியாவில்

இந்தியாவில், ஹிந்தி தேசிய மொழியாக்கப்பட வேண்டும் என ஐம்பது வருடங்களுக்கு முன்பே தீர்மானிக்கப்பட்டது. ஹிந்தி பேசாத மக்களும் இதை ஏற்றுக்கொண்டிருந்தனர். அப்படியிருந்தும் இதுவரை ஹிந்தித் திணிப்பு அங்கு நடைபெறவில்லையென்பது கவனிக்கத்தககது. ராஜ்யங்களுககு இஷ்டமான மொழியில் கருமமாற்ற அங்கு முழுச் சுதந்திரம் உண்டு. ராஜ்யங்களுக்கும் மத்திய அரசாங்கத்துக்குமிடையே தொடர்பு மொழியாக எதைப் பயன்படுத்துவதென்பதே இப்போது தகராறுக்கான பிரச்னை. இருந்தும் கூட, மத்திய அரசாங்கம் தொடர்பு மொழி விஷயத்தில் ஒருதலைப்பட்சமாக ஹிந்தியை புகுத்தவில்லை. 1965-ம் ஆண்டு முதல் மேலும் 10 ஆண்டுகளுக்கு ஆங்கிலம் உத்தியோக மொழியாக இருக்குமென அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டது. ஹிந்தி பேசாத மக்கள் விரும்பும்வரை ஆங்கிலம் தொடர்ந்து இருக்குமென உத்தரவாதமும் அளிக்கப்பட்டிருக்கிறது. 50 வருடங்களுக்குமேல், நாட்டின் நிர்வாக மொழியாக ஹிந்தி இருக்கவேண்டும் என வற்புறுத்திவரும், அனுபவமிக்க தலைவர்கள் கூட, அவசரப்பட்டுத் திணிப்பியக்கம் நடத்த முன்வரவில்லை. எவர் மீதும் மொழியைத் திணிக்கமுடியாது என்பதை அனுபவத்தால் அவர்கள் அறிந்திருப்பதே இதற்குக் காரணம்.

இந்தியாவின் சுதந்திரப் போராட்டம் இதர ஆசிய-ஆபிரிக்க நாடுகளைப் போலவே இலங்கையையும் ஊக்குவித்தது. இலங்கைத் தலைவர்களே இதைப் பகிரங்கமாகக் கூறியிருக்கிறார்கள். இந்தியாவில் நடக்கும் ஒரு மாற்றம் இலங்கையையும் அதுபற்றிச் சிந்திக்கத் தூண்டிவருவதைக் காண்கிறோம். இந்தியாவுக்கு ஒரு தேசிய மொழி வேண்டும் என காந்திஜி தீர்மானித்ததைத் தொடர்ந்து, இலங்கைக்கும் தேசிய மொழி பற்றிய சிந்தனை ஏற்பட்டது. ஆனால் 30 கடந்த 20 அல்லது வருடங்களாகவே இங்கு தேசிய மொழி பற்றிப் பேசப்பட்டது. ஆரம்ப காலங்களில் ஆங்கிலத்துக்குப் பதில் சிங்களமும், தமிழும் உத்தியோக மொழிகளாக்கப்படவேண்டும் என சட்டசபையில் தீர்மானங்கள் நிறைவேறின. அரசாங்கம் இதை ஏற்றுக்கொண்டது. ஆனால் கடந்த 10 ஆண்டுகளாகத் தமிழ்மீது மாற்றாந்தாய் மனப்பான்மை காட்டப்பட்டு வருகிறது.

★

## நியாயம் எங்கே ?

தமிழ் மக்கள் இவ்விஷயத்தில் நியாயமாக நடத்தப்படவில்லை என்பதில் சந்தேகமே இல்லை. சட்டமூலம் சிங்களம் திணிக்கப்படுமுன் தமிழ் மக்களிடம் சிங்களத் தலைவர்கள் உத்தியோக மொழி பற்றிச் சரியான முறையில் விவாதிக்கவில்லை. பேரம் பேசவில்லை. விளக்கம் கொடுக்கவில்லை. இங்கு விஜயம் செய்யவும் இல்லை.

இந்தியத் தலைவர்கள், ஹிந்தி பேசும் மக்கள் தென்னிந்திய மொழியொன்றைக் கற்கவேண்டுமெனக் கூறிவருகிறார்கள். அதேபோல் தென்னிந்திய மக்கள் ஹிந்தியைக் கற்கவேண்டும் என்றும் கூறிவருகிறார்கள். வடநாட்டார் தென்னாட்டு மொழியையும், தென்னாட்டார் வடநாட்டு மொழியையும் கற்க விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. வடநாட்டுச் சர்வகலாசாலைகளில் தென்னாட்டு மொழிகள் கற்பதற்குப் பலவகைகளில் ஊக்கமளிக்கப்பட்டுவருகிறது. ஹிந்தியைக் கற்றுக்கொள்ளுங்கள் என அங்கு தமிழ் மக்களுக்கு உபதேசிக்கப்படடுவருகிறது. அவர்கள் கற்றுக்கொள்ளும்வரை ஹிந்தி அமுலும் தாமதிக்கப்பட்டு வருகிறது.

ஆனால் இலங்கையில் இத்தகைய ஏற்பாடுகள் எதுவுமே இல்லை. கொழும்பிலே ஒரு அரசாங்கம் பதவி ஏற்கிறது. வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அதன் பிரதம மந்திரிகள வருவதேயில்லை. மக்களின் மனப்பான்மை என்னவென்பதை அறிவதும் கிடையாது. பெரும்பான்மை மக்களின் நாடித்துடிப்பு என்னவென்பதுமட்டுமே அவர்களுக்குத் தெரிகிறது. நாட்டின் முக்கிய சிறுபான்மையினர் ஜடப்பொருட்களாகவும், அனுதைகளாகவுமே அரசாங்கத்தின் கண்களுக்குத் தெரிகிறார்கள். கொழும்பிலிருந்து ஒரு தலைப்பட்சமான சட்டத்தை உருவாக்குவதுடன் நாட்டுக்குச் சேவைசெய்துவிட்டதாக எண்ணிக்கொள்கிறார்கள்.

அனுபவமிக்க இந்தியாவில் கூட, உத்தியோக மொழிப் பிரச்னை மக்கள் ஏற்கும் வரை தாமதிக்கப்பட்டுவரும் போது, இந்தியாவின் அனுபவத்தைப் பின்பற்றுவதாகக் கூறும் இலங்கை மட்டும் இவ் விஷயத்தில் அவசரப் படுவானேன்! தேர்தல்களும், கட்சி நலன்களும் ஓங்கியிருக்கும் ஒரு நாட்டில் ராஜதந்திரத்துக்கு இடமிருக்க முடியாது. அரசியல் வாதிகளுக்குத்தான் இங்கு இடம்.

## வாதத்தை ஏற்கமுடியாது

தமிழ் தொன்மையான மொழி என்றும், தென்னிந்தியாவில 3 அல்லது 4 கோடித் தமிழர்கள் அதை வளர்த்து வருகிறார்கள் என்றும், ஆனால் சிங்களம் இலங்கையில் மட்டுமே இருப்பதால் அதற்கு அந்தஸ்து அளிக்க வேண்டும் என்றும் வாதிக்கிறார்கள். தமிழை வளர்க்க தென்னிந்தியர் இருக்கும் போது உங்களுக்குத் தமிழ் எதற்கு என்கிறார்கள். அப்படியானால் இங்கிலாந்திலுள்ள ஆங்கிலேயர்கள் ஆங்கிலத்தை வளர்த்து வரும்போது, ஐரோப்பாவிலுள்ள வேறு சில நாடுகள் தங்கள் சொந்த மொழியுடன் ஆங்கிலத்தையும் ஏன் உத்தியோக மொழியாக வைத்திருக்க வேண்டும்? இதற்கு பதில் சொல்லுங்கள். முடியாது. எனவே உங்கள் வாதம் ஏற்கக்கூடியதல்ல.

திட்டமிட்ட பொருளாதார அபிவிருத்தி இந் நாட்டுக்குத் தேவை. அதற்கு சிங்களவர், தமிழர் ஒற்றுமை தேவை. சிங்களவர் தமிழையும், தமிழர் சிங்களத்தையும் கற்பதன் மூலமே இந்த ஒற்றுமையை ஏற்படுத்த முடியும். இரு சமூகத்தினரும் பரஸ்பரம் ஒருவர் மொழியில் மற்றவர் தேர்ச்சியடையும் வரை, ஆங்கிலத்தை வழக்கம்போல் அரசாங்க மொழியாக வைத்துக்கொள்ளலாம். ஆங்கிலம் அகற்றப்படும்போது இரு மொழிகளும் உத்தியோக மொழிகளாகும். இலங்கை மொழிப்பிரச்னை தீர இதை விடச் சிறந்த யோசனை தென்படவில்லை.

துரதிருஷ்டவசமாக, மொழிப் பிரச்னை இந்தியாவிலும் இலங்கையிலும் மட்டுமே பெரும் பிரச்னையாக இருக்கிறது. இதர சுதந்திர நாடுகளில் மொழிக்காக இவ்வளவு ஆர்ப்பாட்டம் தற்சமயம் இருப்பதாகத் தெரியவில்லை. எல்லா நாடுகளும் பொருளாதாரப் பிரச்னையிலேயே கவனம் செலுத்தி வருகின்றன.

இலங்கையின் மற்றோர் துரதிருஷ்டம் சோல்பரி அரசியல் திட்டம் அமுலில் இருப்பதேயாகும். சுதந்திர இலங்கை, அந்நியர்களால் வகுக்கப்பட்ட அரசியலமைபபுச் சட்டத்தை ஒழித்துவிட்டு, இந்நாட்டிலேயே தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபையின் உதவியுடன் அரசியலமைப்புச் சட்டம் ஒன்றை வகுத்தால் என்ன!

நிர்ப்பந்தமாகத் திணிக்கப்படும் எந்த முடிவும் நிரந்தரமானதல்ல என்பதை அரசியல் வாதிகள் உணரமாட்டார்கள். ஆனால் ராஜதந்திரிகள்மட்டுமே அதை உணர்வார்கள். இங்கு ராஜதந்திரிகள் இல்லாததே இதற்குக் காரணம். அரசியல் வாதிகளால் நல்ல சரித்திரத்தை சிருஷ்டிக்க முடியாது என்பது மட்டும் நிச்சயம்.

★

## தமிழ் அழியுமோ?

தமிழை எவராலும் அழிக்க முடியாது என்பதும், எவ்வளவு சக்திவாய்ந்த அரசாங்கத்தாலும் அதை ஒழிக்க முடியாதென்பதும் உண்மை. ஏனெனில் அது தெய்வீகமொழி. சமஸ்கிருதத்தைப் போல் அது உலக வழக்கிலிருந்து மங்கிவிடவில்லை. அது என்றும் இளமை குன்றாத கன்னித் தமிழ். மனோன்மணீய ஆசிரியர் சுந்தரம்பிள்ளையின் பாட்டு இதோ:-

"பல்லுயிரும் பலவுலகும்
படைத்தளித்துத் துடைக்கினும் ஓர்
எல்லையறு பரம்பொருள் முன்
இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும், களிதெலுங்கும கவின்
மலையாளமும் துளுவும்
உன்னுதரத்துதித்தெழுந்தே
ஒன்று பலவாயிடினும்
ஆரியம்போல்

(10-ம்பக்கம்பார்க்க)

நாற்குணமும் நாற்படையாம்: 14

# ஆண்மையில் பெண்மையும் பெண்மையில் ஆண்மையும்

— வரணியூர் பண்டிதவித்துவான் ஆ. சின்னத்தம்பி —

பெண் மகளிரின் பெண்மை, தலைவனை எய்தா முன்னர், தாயார் முதலியோரின் அறிவு ஆசார முறைகளை பின்பற்றியும் அவரவர்க்கு இயைந்த அன்பினாற் பிணிப்புண்டும், அவ்வன்புகசேற்றமுறையில் இன்பநிலை எய்தியும் வரலாயிற்று. அப்பெண்மை இனிப் பெறவேண்டிய அன்பும் இன்பமும் வேறு; அவை தலைவனிடத்து அமைவன; தலைவனைப் பெற்ற காலத்து அவனது அன்பும் இன்பமும் அவன் வழிச் சேறலின் அவள் பெண்மை அவன் வழியிசைந்து பணிந்து செயலாற்றுவதாகும். ஆதலினன்றோ? தன் தமர் தன்னை முனியினும், தன்னுயிரையே துரும்பாக எண்ணி நீப்பினும் தான்பெற்ற தலைவனை நீத்து வாழாள். உண்மைநாட்டி அவன் வழி ஒழுகுவாள். அவன் வழி ஒழுகுமிடத்து அதற்குத் தடையாயின எதிர்க்குமாயின் அஞ்சாமை மேற்கொண்டு அறநிலை பேணுவாள்; இவ்வஞ்சாமை உண்மையை நிலைநாட்ட அன்பின் பெருக்கால் ஏற்பட்ட அஞ்சாமையாகும். ஒருத்தியும் ஒருவனும் காதலுற்றுக் கூடிய பின்னர், தமர் முதலாயினோருக்கு அஞ்சி, அவனைமறைத்துப் பொய்யுரைத்து வாழ முற்படுவாளாயின் அவள் மனமே பெரியதோர் அச்சநிலை எய்தும். இப்போழ்து இவள்மாட்டு இருவகையச்சநிலையைக் காண்போம். தனது தமருக்கு அஞ்சுதல் ஒன்று; தன் தலைவனோடு கூட்டமுண்மையை மறைத்து பொய்பேசியது மற்றொன்று; இதின்முன்னையது அறநெறிமீறிய அச்சமாகும்- அவள் தமர்வழியில் நிற்கவேண்டில் அவர்பணியை மேற்கொண்ட அச்சம் வலிந்து நிற்கும். அப்பொழுது கூட்டம் நிகழ இடமின்று; கூட்டம் நிகழுமாயின் அவர்வழி பேணும் அச்சம் வலிகுன்றத் தலைவன் மேற்கொண்ட அன்புவலிந்து தோன்றும். அவ்வாறுவலிந்து தோன்றுமாயின் பின்னர் அவனை மறைத்துத் தமருக்குக்கூற இசையாள். அப்பொழுது அவ்வன்பின்வழி அஞ்சாமை தோன்றி தமருக்குள்ள அச்சத்தை அகற்றிவிடும். இந்நிலையில் தலைவனை நீக்கொழுகல் அவளுக்கு உயிர்போமளவான பேரச்சநிலையாகும். ஏனெனில் அவள் பெண்மை தலைவன் வழியைப் பின்பற்றி ஒழுகலின் அவனையே அவள் மனம்பேணும்- பெண்மைநிரம்பாதாள் ஒருத்தியாயின் அவள் மறைந்து வாழ்தலையே நியாயம் எனக் கொண்டு அவ்வழியில் அஞ்சாமை மேற்கொண்டு தமர், தலைவன் இருவழியினர் பாலும் களவு கொண்டு வாழுவாள். இன்னள் பொய்பேசச் சிறிதும் அஞ்சாள். ஆனால் உண்மையுரைத்தற்கே பெரிதும் அஞ்சுவாள். இவ்விடத்து இவளச்சமே, இதுபோன்று நல்லொழுக்க வாழ்வுக்குஇழுக்கான அச்சமே சான்றோரால் இழித்துரைக்கப்படும் இழிவான அச்சமாகும்.

இந்நிலையில் உண்மையை மறைத்துப் பொய் வாழ்க்கை கண்டவளை, அவள்பொய்யைப் புலப்படுத்தி பொய்யாமாறு காட்டி அவள் பொய்யொழுக்கை [illegible] சிறிதும் அச்சமின்றி அஞ்சாமை மேற்கொண்டு தாம் நினைத்தவாறு வாழ்தலை எவரும் அறியார். ஆதலின், அச்சமும் (அஃது நெறிதவற நேரும் காலத்துண்டாம் அச்சம்) உயரியதோர் குணம் என்பதும், அச்சம் நல்லொழுக்க நெறிபற்றிப் பெண்மையோடியைந்தும், தீய வழியை நாடி பெண்மையோடு மாறுபட்டும் நிகழும் என்பதும், அச்சம் அடங்கி எழும் அஞ்சாமையும் அவ்விருவழியினூடு பயிலும் என்பதும் அவற்றில் தீயவழி நாடிய அச்சமும், அவ்வழி நாடிய அஞ்சாமையுமே அறிஞரால் இழித்துரைக்கப்படுவன என்பதும் பெற்றாம். தீயவழி நாடிய அச்சத்தை ஏழைமை என்றும் அவ்வழிநாடிய அஞ்சாமையை மூர்க்கம் என்றும் கூறுப. "மூர்க்கனும் முதலையும்கொண்டதுவிடா" என்னும் முதுரையை இவ்விடத்து ஒப்பு நோக்குக.

இனி அச்சத்தின் நிகழ்ச்சிப்பாடுகளை அகல நோக்குவோம். அச்சம், பயம், மனஉட்கு என்பன ஒரு பொருட் சொற்கள். இவ்வச்சம் ஆண், பெண் இருபாலருக்கும் உரியதே. ஆனால் பெண்பாலரிடத்து மிகுதியும் வலிந்து தோன்றும். அஃது கடவுளர், உலகோர் கூறும் நெறியாம் அரணின் அதனை காக்கும் அகழியாகும். என்னை? (9ம் பக்கம் பார்க்க)

# கம்பளிச் சால்வை பின்னுவோம்

— கற்பகம் —

மார்கழிப் பனி, இரவெல்லாம் ஒரே குளிர். குளிர் நாட்களில் உடம்பை உஷ்ணமாக வைத்துக்கொள்ள உலகில் எல்லா நாட்டவரும் கம்பளி ஆடைகளை உடுத்திக் கொள்வார்கள். கம்பளி நூலைப் பின்னி பலவகையான ஆடைகளை செய்யலாம். சால்வை செய்தல் இதனுள் மிகச் சுலபம் இக் கலை மிகவும் எளிதானது. தெரிந்து கொண்டால் மிகுந்த பலனையும் தரும்.

இரண்டு நீண்ட ஊசிகளைக் கொண்டு, கம்பளி நூலில் பல சுருக்கு வளைகளைக் கோத்து, அதே நூலைச் சுருக்குகளூடே முன்னும் பின்னுமாக நுழைத்துப் பின்னி, ஆடை உருவாக்குவதே பின்னல் வேலை. ஆடை முழுவதும் ஒரே நூலாற் பின்னப்படும். கைவிரல்களே இவ்வேலைக்கு வேண்டிய எந்திர அமைப்பு.

பின்னுவதற்கு பல்வேறு வகைப்பட்ட தையல்கள் உள்ளன. சாதாரணத்தையல் வளைவுத்தையல் என்ற இரண்டுமே ஏனைய பல்வேறு வகைப்பட்ட தையல்களுக்கும், வேலைப்பாடுகளுக்கும் அடிப்படை. இந்த இரண்டு தையல்களைக் கொண்டு மப்ளர் என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் சால்வையை நாம் சிறப்பாகப் பின்னிக் கொள்ளலாம். குளிருக்கு இது கழுத்தையும், காதுகளையும் போர்த்திக் கொள்ள மிகவும் உபயோகமானதல்லவோ.

முதலில் இரண்டு பின்னல் ஊசிகளையும் ஒரு கம்பளி நூல் பந்தையும் வாங்கிக் கொள்ளவேண்டும்.

(அ) ஏற்ற அளவு அகலத்திற்குச் சுருக்குகளை அமைக்க வேண்டும். சால்வை 6 அங்குலம் அகலமாக இருக்க வேண்டுமானால் ஏறக்குறைய 50 தையல்கள் பின்னவேண்டும் இது இடக்கை ஊசியில் ஒரு சுருக்கம் போட்டு பின் வலக்கை ஊசியை அந்தச் சுருக்கில் நுழைய விட்டு, வலக்கை ஊசியை நூலால் ஒரு தரம் சுற்றி, அந்தச் சுருக்கை இடது ஊசியில் போர்த்துக் கொள்வதால் ஏற்படும். இப்படி 50 தரம் செய்து சால்வையின் அகலத்தைப் பின்னிக்கொள்ளலாம்

(ஆ) ஏனைய வரிகள் சால்வையின் நீளத்துக்குத் தக்கனவாக அமையும். பின்னுபவர் விருப்பத்திற்கேற்ப கூட்டியும் குறைத்தும் கொள்ளலாம். சால்வையை ரேகைத் தையலால் உண்டாக்கலாம். ஒரு சாதாரண பின்னலும் வளைவுப் பின்னலும் மாறி மாறி வருவதே ரேகைத்தையல் அல்லது நரம்புத்தையல் எனவழைக்கப்படுவது.

**சாதாரண பின்னல்**

இப்பின்னல் 'அ'வில்சொன்னபடிசெய்து ஆனால் கடைசியில் சுருக்கை இடது ஊசிக்கு மாற்றுமல் வலது ஊசிக்கு மாற்றுவதால் உண்டாகும். ஊசி முன்புறமிருந்து பின்புறமாக ஆளப்படும்.

**வளைவுப் பின்னல்**

ஒரு சாதாரண பின்னலின் பின் ஒரு வளைவுப் பின்னல் பின்னவேண்டும். இது சாதாரணப் பின்னலுக்கு எதிரிடையானது. ஊசி ஆளும் விதத்தில் மாற்றம் காணப்படுகிறது. வலது ஊசி, இடது ஊசிச் சுருக்கங்களைக் கோர்த்து வாங்கும் முறையில், பின்புறமிருந்து முன்புறமாக ஆளப்படும். பின்னும் முறை சாதாரண பின்னலைப் போலவே அமையும்.

**(இ) சுருக்குகளை கழித்தல்**

விரும்பிய அளவு நீளத்திற்கும் பின்னியபின் சுருக்குகளைக் கழித்து, முடிப்பார்கள். இரண்டு சுருக்குகளைச் சாதாரண முறையில் பின்னி, முதற் சுருக்கும் இரண்டாவதைத் தாண்டவைத்து ஊசியிலிருந்து அதனை நழுவ விடுவது. இப்படி முடிக்காவிட்டால் நூல் கழன்று, கடைசியில் சால்வை முழுவதுமே குலைந்துவிடும்.

இப்படிப் பின்னப்பட்ட சால்வை சும்மா கிடக்காது. பாட்டனுக்கு இது கட்டாயமாக வேண்டியது; ஜனவரி-பெப்ரவரி மாதமல்லவா— அப்பாவும் விருப்புடன் போர்த்திக் கொள்வார்; ஏன் அண்ணை, தங்கைகளும் அதை தங்களதாக்கிக்கொள்ள எத்தனிக்காமல் விடமாட்டார்கள்; மாமன் மாமிமார் மட்டும் என்ன, பின்நிற்பார்களா?




ஓடி ஆடி விளையாடுவதற்கும், ஊக்கத்துடன் பாடங்களை படிப்பதற்கும், நாளொரு மேனி பொழுதொரு வண்ணமாய் வளர்வதற்கும் குழந்தைகளுக்கு நிரம்பிய சக்தியும் பெலனும் அவசியம். ஆகவே அவர்களுக்கு மாமைட் விசேஷமாகத் தேவை. B வர்க்க விட்டமின்கள் நிறைந்திருக்கும் மாமைட் அவர்களை அனுதினமும் திடகாத்திரமாகவும் சுகமாகவும் இருக்கச் செய்கிறது.

சாப்பிடலாம். குழம்பில் அல்லது சூப்பில் மாமைட் சேர்ப்பதனால் அவற்றிற்கு மேலும் சுவையூட்டுகிறீர்கள். B வர்க்க விட்டமின்களை எளிதாக உட்கொள்வதற்கு மிக்க சுவையான முறை மாமைட்டை உங்கள் தினசரி உணவுடன் சேர்த்துக்கொள்வதே.

ஆரோக்கியமாக சக்திமிகுந்து இருப்பதற்கு உங்கள் தினசரி ஆகாரத்தில் B விட்டமின்கள் அவசியம். உங்களுக்கு அனுதினமும் தேவையான B விட்டமின்கள் அனைத்தையும் அளிப்பது மட்டுமின்றி, மாமைட் ஒரு சிறந்த உணவு பொருளாகவும் இருக்கிறது. வெந்நீரிலோ அல்லது வெந்நீருடன் ஓரிரு சொட்டு எலுமிச்சம் பழச்சாறு கலந்தோ அல்லது தாளித்தோ மாமைட் அருந்தலாம். மாமைட்டை பட்டருடன் அல்லது பட்டரின்றி ரொட்டி, பிஸ்கட் அப்பம் இவற்றில் இலேசாக பூசி

மாவுப் பொருள்,
சர்க்கரைப் பொருள் அற்ற,
B விட்டமின் நிறைந்த,
தூய்மையான,
தாவர உணவுப்
பொருள்.




மாமைட்

## டால்ஸ்டாய் சிறுகதை

ஒருவனுக்கு எவ்வளவு நிலம் வேண்டும்? ‘இது தெரியாதா ஆறு அடி நிலம்தான்’ என்று சட்டென்று சொல்லிவிடுவீர்கள். அது என்னவோ மெய். நிச்சயமான தேவைதான். ஆனுல் அந்த ஆறு அடி நிலத்தை நாம் தேடிவைக்க வேண்டுமென்ற அவசியம் கிடையாது. மேலும் சாவதற்குக்குழி தோண்டுவதற்காகத்தான் நாம்பிறந்திருக்கிருேமா என்ன?

வாழ்வதற்கு நிலம் ஒவ்வொருவருக்கும் வேண்டியதுதான். அது எவ்வளவு நிலம்?

இந்தக் கதையில் ஒரு குடியானவன் நிலம் சேகரிக்கத் தொடங்கினுன். அவன் ஆசையோ எல்லையற்று வளர்ந்தது. முடிவில் — அவனுக்கு எவ்வளவு நிலம் கிடைத்தது?

கதையின் முடிவில் அதை அறியலாம். கதை இவ்விதழில் முடியவில்லை. டால்ஸ்டாயின் புகழ்பெற்ற இச்சிறுகதையைத் தமிழ்படுத்தி தருபவர் திருமதி அழகமுத்து மயில்வாகனம்.

# மண் மணம்

ஒரு மூத்த சகோதரி கிராமத்தில் இருந்த இளைய சகோதரியைக் காண வந்திருந்தாள். அவள் நகரத்தில் ஒரு வியாபாரியை மணந்திருந்தாள். இளையவள் கிராமத்தில் ஒரு குடியானவனை மணந்திருந்தாள். சகோதரிகள் தேநீர் அருந்தும்போது பேசிக்கொண்டிருந்தார்கள். மூத்தவள் நகர சீவியத்தின் சிறப்புயர்வுகளைப் பற்றிப் பெருமிதமாகப் பேச ஆரம்பித்தாள். அங்கே சௌகரியமாகச் சீவிக்கலாமென்றும் மிக நல்ல ஆடைகள் அணியலாமென்றும், நல்ல உணவுபான வகைகளும் அருந்தலமென்றும், படக்காட்சி, களியாட்டங்கள் போன்றவற்றிற்குச் செல்லலாமென்றும் சிலாகித்துப் பேசினள்.

இவற்றைக் கேட்ட இளையவளுக்குச் சற்றேனும் பிடிக்கவில்லை. அவள் வியாபாரியின் வாழ்க்கையைப் பற்றிக் குறைவாகவும் குடியானவன் வாழ்க்கையைப் பற்றிப் புகழ்ந்தும் பேசினுள்.

“நான் என் வாழ்க்கையை உன்னுடைய வாழ்க்கைக்காக மாற்ற விரும்பவில்லை. நாங்கள் அநாகரிகமாக வாழ்ந்தாலும் எங்களுக்குத் தொந்தரவுகள் இல்லை. உங்களுக்கு நல்ல உணவும் ஆடைகளும் களியாட்டங்களும் இருக்கலாம். ஆனுல் நீங்கள் தேவைக்கதிகமாக உழைத்த போதும், உங்களிடம் இருப்பவை எல்லாவற்றையும் இலகுவிற் போக்கடித்து விடலாம். ஒரு காலம் பணக்காரராய் இருப்பவர்கள் அடுத்த நாள் பிச்சைக்காரராகி விடுகிருர்கள். எங்கள் வாழ்வு பாதுகாப்புடையது. பணமில்லாவிடினும் நீடித்த கால வாழ்க்கைக்குப் பஞ்சமில்லை. ஆனுல் கையிலே பணம் அதிகம் புரளமாட்டாது என்பது என்னவோ மெய்.”

‘போதும்’ என்று கூறிவிட்டு மூத்தவள் சிரித்தாள்.

“ஆம். மிருகங்களைப் போல சீவிக்க விரும்பினுல் நீ சொல்வதை நான் ஒப்புக்கொள்ள முடியும். உனக்கு நல்ல வாழ்க்கையைப் பற்றியும் ஒழுக்க முறைகளைப் பற்றியும் என்ன தெரியும்? எவ்வளவு கஷ்டப்பட்டு உன் கணவன் உழைத்தாலும் நீங்கள் இப்போ இருப்பது போலவே ஒரே அழுக்குக் குவியலில் மூழ்கி இறந்து போவீர்கள். உங்கள் பிள்ளைகளும் அப்படித்தான்.”

‘அதனுல் என்ன?’—இளையவள் கேட்டாள்.

எங்கள் தொழில் கடினமுங் கரடுமுரடானதும் என்பது உண்மை. ஆனுல் அது நிரந்தரமாய் உள்ளது. நாங்கள் யாருக்குந் தலைகுனிய வேண்டியதில்லை. ஆனுல் பட்டினங்களில் பலவகையான தொந்தரவுகள் உள்ளன. இன்றைக்கு எல்லாம் சரியாக இருக்கலாம். ஆனுல் நாளைக்கு சைத்தான் உன் கணவனை மதுக்கடைக்கோ அன்றேல் சூதுவிளையாட்டுக்கோ அழைத்துச் செல்லலாம். அடபோ எல்லாம் அழிந்துபோய்விடும். அவ்விதம் அநேகமாய் நடப்பதுண்டு!”

சிறியவளின் கணவனை பாகிம் கணப்பின் மேற்படுத்திருந்தபடி பெண்களின் கதையைக் கேட்டுக் கொண்டு இருந்தான்.

“அது முற்றிலும் உண்மை. சிறு பிள்ளைகளாக இருக்கும்போதே, குடியானவர்களாகிய நாங்கள் வயல்களில் உணவு தானியங்கள் பயிரிடுவதில் முயற்சியாக இருக்கிருேம். ஆகையால் மடைத்தனமான எண்ணங்கள் எங்கள் தலைகளுக்குள் நுழைவதில்லை. எங்களுக்கிருக்கும் ஒரே ஒரு குறை என்னவானுல் போதிய நிலம் இல்லாததுதான். எனக்கு போதிய நிலம் மட்டும் இருக்குமேயானுல் சைத்தானுக்குக் கூடப்பயப்படமாட்டேன்” என்ருன் அவன்.

பெண்கள் தேநீர் அருந்திய பின் உடைகளைப் பற்றிச் சிறிது நேரம் பேசினர். பின்னர் பாத்திரங்களைச் சுத்தப்படுத்தி அடுக்கிவிட்டு படுக்கைக்குச் சென்ருர்கள்.

அடுப்புக்குப் பின்னுல் சைத்தான் எல்லாவற்றையுங்கேட்டுக்கொண்டு இருந்தது. குடியானவனுக்குத் தன் மனைவி தன்னைப் பற்றிப் பெருமிதமாகப் பேசியது மகிழ்ச்சியைக் கொடுத்தது. அன்றியும் அதிக நிலம் இருந்தால் தான் சைத்தானுக்கும்கூட பயப்படமாட்டேன் என்றும்சொல்லி இருந்தான்.

“மிகவும் சரி. நாங்கள் ஒரு பரீட்சை செய்து பார்ப்போம். நான் உனக்குப் போதிய நிலம் தருகிறேன். அந்த நிலத்தினுல் உன்னை என் ஆதிக்கத்திற்குட் கொண்டுவந்து விடுகிறேனே இல்லையோ என்று பார்”என்று சைத்தான் தனக்குட் சொல்லிக்கொண்டது.

## 2

கிராமத்திற்கு அருகில் ஒரு பெண்ணிடம் மூவாயிரம் ஏக்கர் நிலம் இருந்தது. குடியானவர்கள் அவள்பால் பிரியம் வைத்திருந்தார்கள். அவள் தன் நிலத்தை மேற்பார்வை செய்வதற்கு ஒரு யுத்த வீரனை அமர்த்தினுள். அவனே அவர்களைக் கோபமூட்டியதுமன்றிக் குற்றப் பணங்களுங் கொடுக்கும்படி செய்தான். பாகிம் மிகவும் கவனமாக இருந்தானுயினும் அவனுடைய குதிரைகளில் ஒன்று மறுபடியும் மறுபடியும், அந்தப் பெண்ணின் தானியத்திற்குட் புகுந்து திரிந்தது. சில சமயங்களில் அவனுடைய எருதுகள் அவளுடைய வயலுக்குட் சென்றன—எப்பொழுதும் அவன் குற்றங் கொடுக்கவேண்டியவனுனுன்.

ஒவ்வொரு முறையும் பாகிம் மன விருப்பமின்றியே குற்றப் பணத்தைச் செலுத்திவந்தான். இதனுல் அவன் வீட்டுக்குப் போகும்போது கோபத்துடன் சென்று குடும்பத்தினருடன் முரட்டுத்தனமாக நடப்பான். கோடைகாலம்முழுவதும் இந்த யுத்த வீரனுல் பாகிமுககுத் தொந்தரவுதான். குளிர்காலம் வந்ததும் மிருகங்களைப் பற்றிய கவலை அவனுக்கு இருக்கவில்லை. ஏனெனில் அவை பாதுகாக்கப்படவேண்டி இருந்தன.

இந்தக் காலத்திற் குடியானவர்களுக்கு ஒரு செய்தி எட்டியது. அந்தப் பெண் தன் நிலத்தை பெருந்தெருவில் விடுதி வைத்திருக்கும் ஒருவனுக்கு விற்கப்போவதாகக் கேள்விப்பட்டார்கள். அவர்கள் அதை விரும்பவில்லை. ஏனென்ல் அந்த விடுதிக்காரன் யுத்த வீரனிலும் பார்க்கக் கூடுதலாகவே குற்றப் பணம் அறவிட்டு தங்களைக் கோபமூட்டக்கூடியவன் என எண்ணினர். அவர்கள் எல்லோருமே அவளுடைய நிலத்தைத் தானே நம்பிவாழ்ந்தார்கள்.

ஆதலால் எல்லோரும் சேர்ந்து கிராமசபை மூலமாக அந்தப் பெண்ணின் காணியை வாங்கமுற்பட்டனர். அவள் அதற்கு ஒப்புக்கொண்டாள். கிராமசபை முதலில் அதை வாங்க ஒழுங்குசெய்தது. குடியானவர்கள் இதற்காக இருமுறை சந்தித்தும் ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை. சைத்தான் அவர்களிடத்தில் ஐயப்பாட்டை உண்டாக்கிவிட்டது. அவர்கள் ஒருவரை ஒருவர் நம்பவில்லை ஆகையால் இறுதியில் தனித்தனியே வாங்குவதற்குத் தீர்மானித்தார்கள். அவரவர்களால் இயன்றதை வாங்க முயற்சிசெய்தார்கள். இந்தத் திட்டத்திற்கும் அந்தப் பெண் சம்மதித்தாள்.

பாகிம், தன் அயலில் இருப்பவன் ஐம்பது ஏக்கர் நிலம் வாங்கப்போவதாக அறிந்தான். அவன் முதலில் அரைவாசிப் பணத்தைக் கொடுத்து மிகுதியை ஒரு வருஷத்தின் பின் கொடுப்பதாக உத்தேசித்திருக்கிருன் என்றும் கேள்விப்பட்டான். பாகிமும் நிலம் வாங்க விரும்பினுன்.

நிலம் எல்லாம் விலைப்படுகின்றது. எனக்கொன்றுங் கிடையாதென்று மனைவியிடம் சொன்னுன். சீவியம் கஷ்டமாய் இருக்கிறது. நாங்களும் நாற்பது ஏக்கர் நிலமாவது வாங்கவேண்டும் என்ருன்

இருவருமாகப் பணத்திற்கு என்னசெய்யலாம் என யோசித்தார்கள். அவர்கள் நூறுரூபிள்கள் சேமித்து வைத்திருந்தார்கள். அத்துடன் ஒரு குதிரையையும் அரைவாசித் தேனீக்களையும் விற்ருர்கள். பிள்ளைகளில் ஒருவனை வேலைக்கு அனுப்பி அவனுடைய சம்பளத்தை முற்பணமாகப்பெற்ருர்கள் மிகுதிப்பணத்தை ஒரு சொந்தக்காரனிடம் கடன்வாங்கினுர்கள். இவ்வாறு நிலத்தின் விலைக்கான தொகையில் அரைவாசிப்பணத்தைச் சேகரித்து விட்டார்கள்.

பாகிம் நாற்பது ஏக்கர் நிலத்தைத் தெரிந்தெடுத்தான். நல்ல சோலையுள்ள பகுதியைப் பார்த்துவிட்டு நிலக்காரியிடம் விலை பேசச் சென்ருன். அரைவாசிப் பணத்தைக் கொடுத்து விட்டு, மிகுதியை இரண்டுவருஷக் கடைசியிற்தருவதாக வாக்குப் பண்ணினுன்.

இப்போ, பாகிம் சொந்தத்தில் நிலம் வைத்திருந்தான். அவன் அந்த நிலத்தில் விதை கடன் வாங்கி விதைத்தான். அருவிவெட்டுங் காலம் நல்ல பலன் கிடைத்ததால், அவன் ஒரு வருஷத்திற் சொந்தக்காரனுடைய பணத்தையும், நிலத்தின் மீதிப்பணத்தையுங் கொடுத்துக் கடனைத் தீர்த்து விட்டான். தன் சொந்த நிலத்தில் உழுதல், விதைத்தல், அருவிவெட்டல், வைக்கோற்போரிடல், மரங்கள் வெட்டுதல், கால்நடைகளை மேய்த்தல் போன்றவற்றைச் செய்துவந்தான். வயல்களை உழச்செல்லும் போதோ, விளைந்த தானியத்தைப் பார்வையிடும் போதோ, புல்நிலங்களைப் பார்க்கும்போதோ அவன் இதயம் மகிழ்ச்சியாற் துள்ளும். அவனுடையநிலத்தில் உண்டாகிய புல்லோ மலர்களோ வேறெங்குமே இல்லாதவை போல் அவனுக்குப் புலப்பட்டது.

## 3

பாகிம் மிக்க மகிழ்ச்சியுடையவனுக இருந்தான். குடியானவர்கள் அவனுடைய தானிய வயல்களுக்குள்ளேயும்புல்நிலங்களுக்குள்ளேயும் சென்றிருக்காவிட்டால் எல்லாம் சரியாக இருந்திருக்கும். மிக்கமரியாதையுடன் அவர்களை வரவேண்டாமென்று அவன் சொன்னபோதும், அவர்கள் கேட்கவில்லை. சிலவேளைகளில் இடையர் தங்கள் கால்நடைகளை வயல்களுக்குட் திரியவிடுவார்கள். சிற்சில சமயங்களில் அவனுடைய தானியத்திற்குட் குதிரைகள் நடமாடும். பாகிம் சலிக்காமல் களைக்காமல் அவைகளைத் துரத்திவிட்டுச் சொந்தக்காரரை மன்னித்து விட்டான். நீண்டகாலமாக அவன் சட்டத்தை நாடவில்லை. பின்னர் அவன் பொறுமையிழந்தவனுய்ப் பெரிய கோட்டுக்கு விஷயத்தைத் தெரிவித்தான். அவர்கள் தன் நிலத்தை நாடுவது அவர்களுக்குப் பூமி இல்லாதபடியால் தான் என்பது அவனுககுத் தெரிந்திருந்தது. ‘அவர்கள் எண்ணிப் பிழை செய்யவில்லையாயினும் இப்படியே நீடிக்கவிட்டால் எல்லாம் அழிந்துவிடும். ஆதலால் அவர்களுக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டு’மென்று மனதுள்ளே கறுவிக்கொண்டான்.

அவர்களைக் கோட்டுக்கு அழைத்து, இரண்டொருமுறை பாடங் கற்பித்தான். இரண்டு மூன்றுபேர் குற்றப்பணம் செலுத்தவேண்டி நேர்ந்தது. சிலகாலம் சென்றபின் பாகிமுக்கு அண்மையாக இருந்தவர்கள் அவனை வெறுக்கத்தொடங்கினர். சில சமயங்களிற் கால்நடைகளை வேண்டுமென்றே அவன் வயலுக்குள் துரத்தி விட்டனர்.

ஒரு குடியானவன் பாகிமுடைய நிலத்தினுள் சென்று அழகான ஐந்து முதிராதமரங்களை அவற்றின் பட்டைக்காக வெட்டினுன். ஒருநாள் பாகிம் அவ்விடத்திற்குச்சென்றபோது ஏதோ வெண்மையாகத் தெரிவதைக் கண்டான். அருகில் சென்று பார்த்தபோது பட்டை எடுக்கப்பட்ட மரங்கள் தரையில் வீழ்ந்துகிடப்பதைக்கண்டு பாகிம் மிகவும் கோபங்கொண்டான். ‘இங்கொன்று அங்கொன்ருக வெட்டினுலே மிகமோசமாக இருந்திருக்கும். அப்படியிருக்கயாரோபயல் ஒருமுழுக்கூட்டத்தையும்வெட்டிச்சாய்த்திருக்கிருனே! இதனை யார் செய்திருப்பார்கள். அவன் மட்டும் அகப்படட்டும் பார்க்கிறேன். அவனுக்கேற்ற தண்டனை கிடைக்கச் செய்வேன்’ என்று ஆத்திரமடைந்தான்.

யார் இப்படிச் செய்திருக்கலாமெனத் தீவிரமாக யோசித்தான். ‘இது சைமன் வேலையாகத்தான் இருக்கவேண்டும், வேறொருவரும் இப்படிச்செய்யமாட்டார்கள்’ என்று எண்ணியவனுய், அவனுடைய வீட்டுக்குச் சென்ருன். அங்கு ஒரு அடையாளத்தையும் அவனுல் காணமுடியவில்லை. சண்டைதான் நிகழ்ந்தது. பின்னர் அவன் தான் செய்தவனென முடிவுசெய்து அவனைப் பற்றி குற்ற அறிக்கை தாக்கல் செய்தான். சைமன் கோட்டுக்குவந்தான். வழக்கு இரண்டுமுறை விசாரிக்கப்பட்டது. அவனுக்கெதிராக ருசு இல்லாததால், சைமன் விடுதலைசெய்யப்பட்டான். பாகிம் மேலும் கோபம் கொண்டு நீதிமான்களிடம் ஆத்திரமடைந்தான்.

‘கள்வரிடமிருந்து நீங்கள் பணம் வாங்குகிறீகள். நீங்கள் நேர்மையாக நடந்திருந்தால் கள்வனைச் சும்மா விட்டிருக்கமாட்டீர்கள்’, என்று சொல்லி முறையிட்டான்-மற்றும் குடியானவர்களோ அவனுடைய கட்டிடங்களை எரிக்கப்போவதாகப் பயமுறுத்தினர். அவனிடம் நிலம் இருந்தபோதும், அவர்கள் அவனை வெறுத்தார்கள்.

இந்தச்சமயத்தில், இப்பகுதிகளில் இருந்தவர்களில் பலர் ரஷ்யாவின் வேறுபகுதிகளுக்குச் செல்லப் போவதாக ஒரு பேச்சு அடிபட்டது

‘என் நிலத்தை விட்டுவிட்டு, நான் போகவேண்டிய அவசியமில்லை’ எனப் பாகிம் எண்ணினுன். ‘ஆனுல் இந்தக்கிராமத்திலிருந்து ஆட்கள் வெளியேறினுல், எங்களுக்குப் போதிய நிலம் இருக்கும். அவர்களுடைய காணியையும் சுவீகரித்து என் தோட்டத்தைப் பெரிதாக்குவேன். பின்னர் நான் அதிக சௌகரியங்களுடன் வாழலாம்’ என்று சொல்லிக்கொண்டிருந்தான்.

ஒருநாள் அவன் வீட்டில் இருக்கும்போது, அக்கிராமத்திற் கூடாக வழிப்பயணம் போன ஒருகுடியானவன் தற்செயலாக அங்கு வந்தான். பாகிம் இரவு அவனை அங்கே தங்கச்செய்து இராப்போசனமும் கொடுத்தான். அவனுடன் பேசிக்கொண்டு இருந்தபோது, அவன் எங்கே இருந்து வருகிருன் எனப் பாகிம் கேட்டான். வொல்கா நதிக்கு அப்பால் இருந்து வருவதாக அவன் சொன்னுன். ‘அங்கு வசிக்கும் நாங்கள் ஒருசங்கத்திற்சேர்ந்து ஆளுக்கு இருபத்தைந்து ஏக்கர் நிலம் வாங்கி இருக்கிறோம். அந்தப் பூமி மிக நல்ல பயன் தரும். அங்கு தானியம் விதைத்தால், குதிரை உயரத்திற்கு வளர்ந்து கதிர்விடும். ஒருவன் ஒன்றுமில்லாமல் அவ்விடத்திற்கு வந்து இப்போ ஆறுகுதிரைகளும் இரண்டு மாடுகளும் தனக்குச் சொந்தமாக வைத்திருக்கிருன்’ என்று புதிய மனிதன் சொன்னுன்.

இந்த வரலாற்றைக் கேட்டதும், பாகிமுக்கு ஆசை மேலிட்டது. ‘நான் ஏன் இந்த நெருக்கமான இடத்தில் அவதிப்படவேண்டும்? வேறிடங்களிற்

(8-ம் பக்கம் பார்க்க)

### வினேபாஜியின் பூமிதான இயக்கம்

இந்தியாவில் கிராமதானமாக வழங்கப்பட்ட 600 கிராமங்களுக்கு அந்தக் கிராம மக்களின் வாழ்க்கைத்தரம் உயர தலா ரூபா 6000 வீதம் உதவிப் பணம் வழங்க கருணையுள்ள ஆங்கிலேயர் சுமார் 500 பேர் முன்வந்திருக்கின்னர்

ஆசார்யா வினேபாஜியின் பூமிதான இயக்கத்துக்கு 5 லட்சம் பேர் மொத்தம் 41 லட்சம் ஏக்கர் நிலம் வழங்கியுள்ளனர். இதில் 16 லட்சம் ஏக்கர் நிலம 3 லட்சம் பேருக்கு விநியோகிக்கப்பட்டிருக்கிறது. 4 லட்சம் ஏக்கர் நிலம் விவசாயத்துக்குத் தகுதியற்றதெனக் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது.

# வேட்டைப்புலி!

—பொ. சண்முகநாதன்—

காவல்கார இராசையாவுக்கு மகிழ்ச்சி தாங்கமுடியவில்லை. முதலாளியின் மகன் சிவகுரு கமத்துக்கு வருவது இதுதான் முதல்தடவை. இரண்டுமணி எப்போது வரும் என்று அடிக்கடி பொழுதைப் பார்த்துப் பார்த்துக் காத்துக்கொண்டிருந்தான்.

கொழும்பிலிருந்துகாலை புறப்படும் யாழ்தேவி நண்பகல் பன்னிரண்டு சுமாருக்கு கிளிநொச்சியை வந்தடையும். அங்கிருந்து வாடகைக் கார் பிடித்து பரந்தனைத் தாண்டி தருமபுரத்திலுள்ள கமத்துக்கு வந்துசேர அநேகமாக இரண்டு மணி ஆகிவிடும்.

சிவகுருவைப்பற்றி இராசையாவுக்கு முதலாளி அடிக்கடி சொல்லியிருக்கிறார்—

சிவகுருவுக்கு வேட்டையில் மிகுந்தஆசையாம். சிறந்த துப்பாக்கி வாங்கிவைத்திருக்கிறாராம். ஏராளமான தோட்டாக்களை வாங்குவதற்கும் வைத்திருப்பதற்குமான அனுமதியை அரசாங்கம் அவருக்கு வழங்கியுள்ளதாம். துப்பாக்கி சுடுவது பற்றியும் வேட்டைகள் பற்றியுமான ஏராளமான ஆங்கில நூல்களை வாங்கி வைத்திருக்கிறாராம். அவைகளை அடிக்கடி படிப்பாராம். கொழும்பிலே சுடுவதற்கான சூழ்நிலையோ பறவை, மிருகங்களோ கிடையாவாம். கிடைத்தால் எத்தனையோ பறவைகளையும் மிருகங்களையும் சுட்டுத்தள்ளியிருப்பார். இங்கு வருவதென்றால் கட்டாயம் வேட்டைக்கான ஆயத்தங்களுடன்தான் வருவார் -என்றெல்லாம் கனக்கசொல்லியிருந்தார்.

"சின்ன ஐயா துப்பாக்கி கொண்டு வருவார். கல்மடு அல்லது கண்டாவளைப் பக்கம் போனால் நிச்சயம் பன்றியோ மரையோ கொண்டு தான் வருவார். அதோடு நானும் ஐயாவைப்போலவே துப்பாக்கி சுடவும் வேட்டையாடவும் கற்றுக்கொள்ளலாம்" என்று மனக்கோட்டை கட்டினான் இராசையா. கொழும்பிலிருந்து வரும் சின்னஐயாவுக்கு ஏதாவது சமையல் செய்யவேண்டும் என்பதற்காக பக்கத்துக் கமத்தின் காவல்காரன் காளிமுத்துவிடம் துப்பாக்கியை "ஏதாவது மர அணில் சந்தித்தால் பார்த்துக்கொண்டு திருப்பித் தருகிறேன்" என்று கேட்டு வாங்கிகொண்டான் இராசையா. அடுக்குப் பெட்டிக்குள் பத்திரமாக வைத்திருந்த ஒரே ஒரு தோட்டாவையும் எடுத்துக்கொண்டு பக்கத்துக் காட்டுக்குள்போனான்.

அரை மணித்தியாலத்திற்குள கையில் ஒரு மர அணிலுடன் திரும்பி வந்தார்.

★

கொழும்பிலிருந்து வந்த சிவகுரு சின்ன ஐயா வந்தகளை ஆறமுன்னம் தமது பெட்டி ஒன்றை அவிழ்த்து அதற்குள் பாகம்பாகமாக இருந்ததுப்பாக்கியை எடுத்துப்பொருத்தினர். துப்பாக்கியை துடைப்பதற்கு உதவும் 'பிரஷ்' எண்ணெய் ஆகியவைகளை ஐயாமார்களுக்காக இராசையா பலகைகளால் செய்திருந்த மேசைமீது, வைத்தார். இன்னொரு பெட்டிக்குள்ளிருந்து இரண்டு பெரிய ஆங்கில நூல்களை எடுத்து அதற்கருகில் வைத்தார். அதற்கு அருகில் தினிசுதினிசானபல பெட்டிகளில் நிறையதோட்டாக்கள். இன்னும் அந்த மேசையில் தோட்டாக்களைச் செருகக்கூடிய துவாரங்கள் அமைந்த இடுப்புப் பட்டி. மிகவும் சக்திவாய்ந்த ஒரு மின்பொறி விளக்கு. நெற்றியில் கட்டும் ஒருவிளக்கு...

இவைகள் எல்லாவற்றையும் காளிமுத்து, நடராசா போன்ற தனது நண்பர்களுடன் வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டிருந்தான் இராசையா. இடையிடையே தனக்குத் தெரியாதவைகளுக்கு விளக்கமும்கேட்டுக்கொண்டிருந்தான்.

நூல்கள் இரண்டையும் எடுத்து அதிலுள்ள படங்களைத் தன் சகபாடிகளுக்குக் காட்டித் தானும் பார்த்துக் கொண்டிருந்தவன்—

"இதுகள் வேட்டையைப் பற்றிய புத்தகங்களா ஐயா? முழுக்க துவக்குகளின் படமும் மிருகசாதிகளின் படங்களுமாய் போட்டிருக்கே" என்ருன்.

"ஓம். ஒன்று துப்பாகிகள் பற்றியது. அந்தப் புத்தகத்தில் துப்பாக்கிகளைப் பற்றியும், துப்பாக்கிகளைப் பாதுகாப்பாக வைத்திருக்கும் முறைகளும், எந்தெந்த உயிரினங்களுக்கு எந்தெந்த நம்பர் தோட்டாக்கள் பாவிக்கவேண்டும் என்ற குறிப்புகளும், இலக்கு அணைக்கும் முறைகள் பற்றியும்தான் முழுக்கவும் எழுதியிருக்கு."

"மற்றப் புத்தகத்தில்......?"

"மற்றதில் உலகிலுள்ள பலவகை மிருகங்கள், பறவைகள் பற்றியும், காலடிகளையும் ஒலிகளையும்கொண்டு எவை எவை எங்கு எங்கு இருக்கின்றன என்பதை அறிவது பற்றியும், மிருகங்கள், பறவைகளுக்கு எந்தெந்த இடங்களில் எப்படி எப்படி வெடி வைக்க வேண்டும் என்பதுபற்றியும் எழுதியிருக்குது."

இதன்பின் இராசையாவும் அவனது நண்பர்களும் நூல்களை மிகவும் கவனமாகவும் ஆர்வத்துடனும் பார்ப்பதில் ஈடுபட்டார்கள். அதேபோல் நெற்றியில் கட்டும் விளக்கிலும் எல்லாரும் கவனம் செலுத்தினர்கள்.

"நல்ல பட்டி ஒன்றும் கிடக்குது போல" என்று ஒருவன் வியந்தான்.

"பின்னே, காளிமுத்துவைப் போல ஐயாவையும் தோட்டாக்களை மடியிலை கொண்டு திரியச் சொல்லுகிறீயோ?" என்று இராசையா பதில் சொன்னதும் அங்கு 'குபீர்' சிரிப்பு எழுந்தது.

"இரண்டு நாள் தான் தங்குவதற்கு லீவு இருக்கு என்று எழுதியிருந்தீர்களே! இப்ப துவக்கு துடைக்க எண்ணெய், 'பிரஷ்' எல்லாம் கொண்டந்திருக்கிறீங்களே?"

"துப்பாக்கியை ஒரு நாள் பாவித்தாலும் அதை உடனே துப்பரவாகத் துடைத்து வைத்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் அது கெதியில் பழுதாகி விடும். அது சரி,வேட்டையாட மிருகங்களல்லவா அகப்பட வேண்டும். எந்தப் பகுதியிலே மிருகங்கள் கிடைக்கும்?"

"கல்மடு, கண்டாவளைப் பகுதியில் ஏராளமான பன்றிகள் இருக்குதய்யா. துவக்குச் சூட்டில் எங்களுக்கு அவ்வளவு திறமை இல்லாததால் சுட முடிவதில்லை. சூடு வாங்கிக் கொண்டு ஓடுவதும், குறிதவறுவதுமாகப் போய்விடுகிறது" என்ருன் காளிமுத்து.

"ஐயா போனியளென்டால் கட்டாயம் சுடலாம். கல்மடுதான் கிட்டவும் ஏராளமான பன்றிகளும திரியிற இடம்" என்ருன் இராசையா.

கடைசியில் நிலவு வந்ததும் கல்மடு போவதென்றும் காளிமுத்து, நடராசன் ஆகியோரையும் கூட அழைத்துப் போவதென்றும், சிவகுரு முடிவுக்கு வந்தான் இராசையாவுக்கும் கூடப் போவதற்கு ஆசைதான். ஆனல் 'கமத்தைப்பார்க்கிற லட்சணம் இதுதானே' என்று ஐயா நினைத்தாலும் என்ற பயத்தால் தனது ஆசையை அடக்கிக் கொண்டான்.

இதன்பின் எல்லாரும் போய்விட்டனர். சிவகுரு அந்த ஆங்கில நூல்களில் ஒன்றை எடுத்துப் படிக்கத் தொடங்கினர்.

★

"டிர்ர்ர்..."

சிவகுரு தன்னுடன் கொண்டு வந்திருந்த மணிக்கூடு பன்னிரண்டு மணி ஆனதும் அலறி சிவகுருவைஎழச் செய்தது; இராசையாவும் எழுந்தான். "இந்த உடைகளையும் இந்தச் சப்பாத்துக்களையும் அணிந்தால் மிருகங்கள் எங்கள் வருகையைத் தெரிந்துகொள்ள மாட்டா" என்றபடியே சிவகுரு காக்கி நிற மேல் சட்டையையும் அரைக்கால் சட்டையையும் காலணிகளையும் அணிந்து கொண்டார்.

பட்டியை இடையில் கட்டி அதிலுள்ள எல்லாத் துவாரங்களிலும் தோட்டாக்களைச் செருகினர். நெற்றியில் விளக்கைப் பொருத்தி அது எரிகிறதா என்பதை விசையைத் தட்டிச் சரிபார்த்துக் கொண்டார்.

இதற்கிடையில் சிவகுருவுடன் போவதற்காக காளிமுத்துவும் நடராசனும் வந்துவிட்டனர். அவர்களில் ஒருவனிடம் மின்பொறி விளக்கைக் கொடுத்தார். மற்றவனை ஒரு பெரியபொல்லைக் கையில் கொண்டு வரும்படி சொன்னர்.

இத்தனைக்கும் பின் சிவகுரு துப்பாக்கியையும் எடுத்துத் தோளில் வைத்துக்கொண்டு நடந்தது இராசையாவுக்கு ஒரு போர் வீரனை நினைவூட்டியது. பன்றி இறைச்சியைச சுவைப்பதுபோன்ற உணர்ச்சி அவனுக்கு ஏற்பட்டது.

★

விடிந்து எட்டு மணியாகியும் சிவகுருவையும் அவருடன் சென்றவர்களையும் காணாது தவித்தான் இராசையா.

இரவில் பல துப்பாக்கி வெடிச்சத்தங்கள் கேட்டதைக் கொண்டும், விடிந்து இவ்வளவு நேரமாகியும் வேட்டைக்காரர்கள் திரும்பாததைக் கொண்டும் ஒரு நம்பிக்கையான முடிவுக்கு வந்தான்.

'இத்தனை வெடிகள் ஒரு நாளும் கேட்டதில்லை. சுடுவதற்கு இவ்வளவு தோட்டாக்களும் தருமபுரத்து ஆட்களிடம் கிடையாது. வெடி வைத்தது சின்ன ஐயாவாகத்தான் இருக்க வேண்டும். சூடு வாங்கிக்கொண்டு தப்பி ஓடிய பன்றியை துரத்தித் துரத்தி ஐயா வெடி வைத்திருக்கிறர். இல்லாதுபோனல் பல பன்றிகளுக்குஅவர்வெடி வைத்திருக்க வேண்டும். எப்படியும் ஒரு பன்றியேனும் கிடைத்திருக்க வேண்டும். மாறி மாறி இளைப்பாறி இளைப்பாறி பன்றியைச்சுமந்து கொண்டு நடந்து வருகிறார்கள். அல்லது பன்றியைக் கொண்டுவருவதற்கு காருக்கு அலைகிறார்களோ என்னவோ இல்லாவிட்டால் இவ்வளவு நேரம் ஏன் ஆகவேண்டும்.'

இராசையா பூரண நம்பிக்கையுடன் கத்தியைத் தீட்டிக் கொண்டான். மனைவியிடம் சமையலுக்கு ஆயத்தமாகும்படி கூறினன். கொல்லையில் ஓய்வு பெற்று வந்த பெரிய சட்டிகளும் தாச்சிகளும் சமையலறைக்குமுன் வந்து சேர்ந்தன. இறப்பில் தொங்கிக் கொண்டிருந்த தேங்காய் எண்ணெய்ப் போத்தல் கீழே இறக்கப் பட்டது.

பேச்சுக் குரல் கேட்டு வீட்டுக்கு வெளியே எட்டிப்பார்த்தான் இராசையா. சிவகுரு துப்பாக்கியுடனும், நடராசா ஒரு கையில் ஒரு புருவும் மறு கையில் பொல்லு, மின்பொறி விளக்குகளுடனும் வந்தனர்.

இராசையாவுக்கு பன்றியைக் காணாதது கவலையையும் ஏமாற்றத்தையும் கொடுத்தது. இருந்தாலும் சமாளித்துக் கொண்டு "காளிமுத்துவை எங்கே காணேமே!" என்ருன்.

"காளிமுத்துவை ஒரு காருக்காக அனுப்பியிருக்கிறேன்" என்ருர் சிவகுரு.

இராசையாவுக்கு மீண்டும் மகிழ்ச்சி. தான் எண்ணியது சரிதான் என்று நினைத்து மனம் பூரித்தான்.

"எப்படி ஐயா பன்றி வேட்டை!" என்று கதை கேட்கும் ஆசையுடன் இராசையா பேச்சுக் கொடுத்தான்.

"என்ன நாசமோ தெரியவில்லை; மூன்று பன்றிகளைக் கண்டோம். ஐந்து சூடு சுட்டோம். ஊகும். ஒரு சூடுபட வேண்டாம்..." என்று அலுத்துக் கொண்டவாறே காரணத்தை அறிய துப்பாக்கிச் சூடுபற்றிய ஆங்கில நூலைப் புரட்டினர்.

"அப்ப கார் என்னத்திற்கு ஐயா?" - இராசையாவும் அதே சலிப்புடன் கேட்டான்.

"அது நான் நாளைக் காலை ஸ்டேசனுக்குப் போறதற்கு. இங்கேதான் கார் பிடிப்பது மிகவும் கடினமாமே!'

இப்பொழுது இராசையா தன்னைநினைத்து - தனது வல்லமையைநினைத்து ஒருவித பெருமிதம்கொண்டான்

வேட்டை பற்றியும் துப்பாக்கி பற்றியும் அறப்படித்த சிவகுருவிலும், வேட்டை, துப்பாக்கி பற்றி அறவே படியாத இராசையா எவ்வளவோ உசத்தி அல்லவா? பன்றி வேட்டைக்குப் போய் புருவுடன் திரும்புவதிலும் மர அணிலுக்குப்போய் மர அணிலுடனேயே திரும்புவது உயர்வு தானே! (யாவுங் கற்பனை)

## அற்புத நடனம்

— வ. குகசர்மா —

மாலைநேரம்
வசந்தகால
வனப்பு மஞ்சள்
பரவையில்
சோலை சேரும்
முகிலின் ஓசை
மாயனெற்றும்
முரசொலி
அலையும் மின்னல்
தேவர் கண்கள்
அதனிலுற்ற
மழை கண்ணீர்
நீலம் கொண்ட
மயில் பரையாம்
தேவ நடனம்
ஏத்துவோம்.

நேயம் மிக்க
கருத்திலன்பர்
நேரில் இதயம்
தழைக்கவே
காயம் கொண்ட
காளி தன்னின்
அகந்தை தானும்
சிதறவே
காயம் பெற்ற
உயிர்களோடு
ககனம் பூமி
யாடவே
மாயத் துன்பம்
யாவு மோடி
மருள நடனம்
வாழ்த்துவோம்.

# மண்மணம்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

சௌகரியமாக இருக்கமுடியுமாகில் இங்கேயுள்ள பூமியையும் வீட்டையும் விற்று அந்தப் பணத்தைக் கொண்டு அங்கு போய் எல்லாவற்றையும் புதிதாக வாங்கலாம். இந்த நெருக்கமான இடத்திலே எப்பொழுதும் தொந்தரவாக இருக்கிறது. எதற்கும் நான் முதலிற் சென்று எல்லாவற்றையும் பார்வையிடவேண்டும்' என்று எண்ணிக்கொண்டான்.

கோடைகாலம் நெருங்க, அவன் ஆயத்தம் செய்து கொண்டு புறப்பட்டான். வொல்கா ஆற்றில் ஒரு நீராவிக் கப்பலிற் சென்று சாமராவை அடைந்தான். பின்னர் முன்னூறு மைல் கால்நடையாகச் சென்று குறித்த இடத்தை அடைந்தான். புதிய மனிதன் சொன்னபடியே எல்லாம் இருந்தது. சங்கம் ஆணுக்கு இருபத்தைந்து நிலத்தைஏக்கர் ஒன்றுக்கு ஒரு றூபிள் வீத விலைப்படி கொடுத்திருந்தது.

பாகிம் வேண்டிய விபரங்களை அறிந்துகொண்டு அருவி வெட்டுங்காலம் வீட்டுக்குத் திரும்பிவந்து தனக்குச் சொந்தமானவற்றையெல்லாம்லாபம் வைத்துவிற்ருன். வசந்தகாலம் வரையுங் காத்திருந்த பின் குடும்பத்துடன் புதியதோர் நாட்டையும் வீட்டையும் காடி அங்கிருந்து வெளியேறினன்.

### 4

பாகிம் குடும்பத்துடன் புதிய இடத்திற்கு வந்ததும், பெரிய கிராமத்தின்சங்கத்தில் தன்னை அனுமதிக்கும்படி அவன் விண்ணபபித்தான். சங்கம் வெவ்வேறு வயல்களில் மொத்தம் நூற்றிருபத்தைந்து ஏக்கர் அவனுடைய உபயோகத்திற்குக் கொடுத்ததுமன்றி, தன் சொந்தப் புல்நிலத்தையுங் கொடுத்தது. பாகிம் தனக்குத் தேவையான கட்டிடங்களை அமைத்துக் கால்நடைகளும் வாங்கினன். முன்னர் இருந்ததுபோல் மூன்று மடங்கு நிலம் இப்போ அவனிடமிருந்தது. தானியம் நன்ருக விளையக்கூடிய பூமியாக இருந்ததால் முன்னரிலும் பார்க்கப் பத்துமடங்கு பணக்காரனுகி விட்டான். தானியம் செய்வதற்கும் புல் வளர்ப்பதற்கும் போதிய பூமி அவனிடம் இருந்தது. அவன் விரும்பிய அளவு கால்நடைகள் வைத்திருக்கச் சாத்தியமாக இருந்தது;

பாகிம் இப்பொழுது சந்தோஷமாக இருந்தான். ஆனல் காலம் செல்லச் செல்ல பூமி இன்னமும் வேண்டும்; இருப்பது போதாது என்று எண்ணத் தலைப்பட்டான். முதலாவது வருஷம் தனக்குரிய பங்கில் கோதுமை விதைத்து நல்லபலன் கிடைத்ததால், அதையே தொடர்ந்து விதைக்க விரும்பினன். ஆனல் அதற்கு நிலம்போதியதாக இருக்கவில்லை. அவனுடைய நிலத்திலே மறுபடி புல் முளைக்கும் வரையில் விதைக்க முடியாது. இப்படி அநேகருக்கு மேலும் நிலம் வேண்டி இருந்தது. இதனல் போதிய நிலம் இல்லாததால், சண்டைகள், பூசல்கள் தோன்றின. பணக்காரர் கோதுமை பயிரிட முயன்றனர். வறியவர்கள் வியாபாரிகள் மூலம்அதற்குப் பணம் பெற முயற்சித்தனர். பாகிம் பெருமளவில் கோதுமை பயிரிட எண்ணி ஒரு வியாபாரியிடம் ஒரு வருஷத்திற்குக் குத்தகையாக நிலம் வாங்கினன். அவன் அதிக கோதுமை விதைத்து அதில் நல்ல பலன் கிடைத்தது. ஆனல் அவன் பூமி கிராமத்திலிருந்து அதிக தூரத்தில் இருந்தது— கோதுமையைப் பத்து மைல்களுக்கப்பாற் கொண்டு செல்ல வேண்டி இருந்தது. சில காலம் சென்றபின் பாகிம் சில குடியானவ வியாபாரிகள் சங்கத்தின் கிராமத்திற்கப்பால் பிரத்தியேகமான இடங்களில் வசித்துப் பணக்காரராகி வருவதைக் கவனித்தான். "நானும் சொந்தமாகப் பூமிவாங்கிப் பிரத்தியேகமாகத் தோட்டம் செய்தால், அது நன்ருகவிருக்கும். அப்பொழுது எல்லாம் சௌகரியமாய் இருக்கும், என அவன் எண்ணினன்.

மூன்று வருஷங்களுக்குக் குத்தகைக்கு நிலமெடுத்து கோதுமைவிதைத்தான். பருவகாலமும் தானிய விளைச்சலும் நன்ருக இருந்தபடியால், அவனுக்கு அதிக பணம் மிச்சமாயிற்று. அவன் தொடர்ந்து சந்தோஷமாகச் சீவித்திருக்க முடியும். ஆனல் வருஷா வருஷம் குத்தகைக்குப் பூமி எடுப்பதில் அவனுக்குத் சலிப்புத் தட்டியது. எங்கே

(9-ம் பக்கம் பார்க்க)

# யாத்திரிகன்

தொடர் கதை

"நிலாப்பரி"

சுவாமியார் தம்முன்னால் மணல்மீது அமர்ந்திருந்தவேலாயுதத்தின் தோழனை நேருக்கு நேர் பார்த்து "உமக்கு இப பொழுது என்ன வயதாகிறது மகன்? உன்னுடைய பெயர் என்ன?" என்று வினவினர். அதற்கு அவன் "எனக்கு இரு பத்தேழுவயது மட்டிலாகிறது. எனது பெயர் சிற்றம்பலம்" என்றான்.

"சிற்றம்பலம் திருச்சிற்றம் பலம் நல்லபெயர்"என்று சுவாமியார் அவனது பெயரை வாயாரக்கூறி மகிழ்ந்தார்.

"சிற்றம்பலத்துக்கும் எனக்கும் ஒரே வசிப்பிடம் தான் பாட்டா. நாங்கள் சந்தித்தது முதலாக ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாமலே இருந்து வருகிறோம்" என்று திரும்பவும் பேச்சைத் தொடர்ந்தான் வேலாயுதம். "இரண்டு காலைகளுங்கூடி என்ன கும்மாளமடிக்கிறீர்களோ? சிற்றம்பலத்துக்கும கல்யாணம் ஆக வண்டிய வயசுதான். ஆனும் மாப்பிள்ளைமாதிரி ஷோககாயிருக்கிறான் எத்தனையோ வில்லங்கங்கள் தேடிவரும். புத்தி சபலப்படாமல் விழிப்பாயிருக்கவேணும். ஏன் தம்பி ஊரில் பிரமதா அண்ணன் தம்பி என்று ஆட்கள் இருக்கிறார்களல்லவோ?"

சிற்றம்பலம் மௌனமாகத் தன் தோழனை நோக்கினன். வேலாயுதம பேசினன்.

"அவனுக்கு உயிரும் பிராணனுமாக ஒரு தங்கைகூட இருக்கிறாள் பாட்டா. அவளுக்கு இரண்டு வருசத்துக்கு முன்பு தான் கல்யாணம் ஆச்சு. ஆனல் இப்போ வாழ்விழந்து போயிருக்கிறாள்—

"அட, டட... அதுவும் அப்பிடியோ முருகா!" என்று அநுதாபப்பட்டார் சுவாமியார.

'ஓம் பாட்டா. அந்தப் பெண்ணின் வாழ்க்கையே தனது எல்லா சுகங்களுமென்று எண்ணி இராப்பகல் அதே நினைவாக இருந்தான். அவளுக்கு வீட்டோடு இருக்கக் கூடியதாக ஒரு பொடியனை உறவு முறைக்குள் பார்த்து கல்யாணம் செய்துவைத்து பத்தாயிரம் ரூபாவுக்கு அவனுக்கு காரும் வாங்கிக் கொடுத்து தங்கையின் மனம் குளிர அவனை தொழில்பார்க்க வைத்தான். கல்யாணமாகி ஒரு வருசத்துக்குள்ளாக அவன் கார்செலுத்திச் சென்றபோது எங்கேயோ போய்மோதி ஆளும் இல்லை பொருளும் இல்லை என்றுஆகிவிட்டது. இவனுக்கு அந்நாளில் பைத்தியம் பிடித்திருக்கவேண்டும், நல்லகாலமாக என்னேடு இருந்ததினலே தப்பினன்—

"சிற்றம்பலத்துக்குள்ளே இவ்வளவு கதை இருக்கோ. நல்லதும் கெட்டதும் சுகமும் துக்கமும எல்லாமே அநுபவித்துத் தெளியவேண்டும்—"

"அவனைப்பற்றி இன்னும் கதை இருக்கு பாட்டா—" என்று வேலாயுதம் தொடர்ந்துபேச ஆரம்பித்தபோது ஆற்றின் அக்கரையில் நின்று யாரோ அவனைக் கைதட்டி அழைத்தார்கள். வேலாயுதம் சிற்றம்பலம் இருபேரும் திரும்பிப் பார்த்தார்கள். "எங்களோடு வந்தவர்கள் கூப்பிடுகிறார்கள் பாட்டா" என்றான் வேலாயுதம்.

"அபபோ,போய் சந்தித்துக் கொண்டு பிறகு வாருங்கோவன். நாங்கள் இன்னும் இரண்டு மூன்று தினம் கழித்துத்தான் இங்கிருந்து திரும்புவதாக எண்ணியிருக்கிறோம்" என்றார் சுவாமியார்.

"அப்படியானல் நிரம்ப நல்லதாய் போச்சு,பாட்டா. நாங்களும் இரண்டுநாள் கழித்தே போகலாம். கூடவந்தவர்களிடம்பேசி அவர்களை அனுப்பி விட்டு இன்று இரவு உற்சவம் முடிந்த பிற்பாடு நாளைக் காலையில் உங்களிடம் வருவோம்" என்று சொல்லிக் கொண்டே வேலாயுதம் எழுந்தான். சிற்றம்பலமும் எழுந்து சுவாமியாருக்கும் எனக்கும் கைகூப்பி வணங்கி விடைபெற்றான்.

அவர்கள் போனபிற்பாடு சுவாமியார் என்னிடம் திரும்பி "இவ்வளவு நேரமும் வாயை மூடிக்கொண்டு இருந்து விட்டீரே. வேலாயுதம் எப்படியிருக்கின்றான். சிற்றம்பலத்தைப்பற்றி என்ன நினைக்கிறீர்?" என்று கேட்டார்.

"வேலாயுதம் நீங்கள கண்டெடுத்த இரத்தினக் கல்லைப போலவே விலை மதிப்பற்ற பொருளாகத் தோன்றுகிறான்" என்றேன் சுவாமியார் மனம் குளிரும்படியாக. சிற்றம்பலத்தைப்பற்றி அபிப்பிராயம் சொல்லாமலே நிறுத்திக் கொண்டேன். அபிப்பிராயம் சொல்லாதுபோனலும் நான் இன்னமும் அவனைப்பற்றிய நினைவுடனே தானிருந்தேன். ரயிலில் நான்வரும்போது அவனைப் பார்த்த மாத்திரத்தே ஊகித்தது எல்லாம் முற்றிலும சரியானதாகவே இருக்கும் போல் தோன்றியது. வேலாயுதம் தொடக்கத்தில் சிற்றம்பலம் ஏதோ ஒரு சின்ன வில்லங்கத்தில் மாட்டிக்கொண்டிருப்பதாகச் சொல்லிவிட்டு பின்பு அதுபற்றி ஏதும் சொல்லமலே விட்டுவிட்டான். பாட்டாவின் முன் அதுபற்றி எப்படிச் சொல்வது என்ற தயக்கம் காரணமாயிருக்கலாம். அப்படியனல் அதுவிஷயம் கடற்கரையில் நான் பார்த்த அந்தப் பெண்ணுக்கும் அவனுக்குமுள்ள தொடர்புபற்றியதாயிருக்குமோ?

"சுவாமியார்,சிற்றம்பலம், வயதில் உங்கள் வேலாயுதத்தைப்போலவே இளையவனுகக் காணப்படுகிறான். அவனது ஆயுளுக்கு லட்சம் ரூபா மதிப்பிடலாம இரண்டாம் வகுப்பு அரசாங்க ஊழியனின் மதிப்பை அப்படித்தான் கணக்குப் பாடுவார்கள் இந்தக் காலத்தில். அப்படி ஒரு இளைஞனுக்கு சொந்தமாக வீடும் காணியும் இன்னும் ரொக்கமாக பணமும் பண்டமும் கொடுத்து ஒருபெண்ணை அவனுக்குத்தர ஆயிரம்பேர் போட்டியிடுவார்கள். சிற்றம்பலம் நிரம்பவும் மனக்கலக்கமடைந்திருக்கிறான். என்ன விஷயமோ தெரியவில்லை. அதை நாங்கள் அறிந்து பார்ப்பது நல்லது" என்றேன்.

"எல்லாம் இறைவன் சித்தம்: இந்த ஆண்டு தீபஉற்சவத்துடன் நல்லதொரு பணி நம்பொல்லாவினை போக்க நம் மெதிரே காத்திருக்குமாப போல தோன்றுகிறது. இதுவும் அவனது திருவுள்ளம் என்றே ஏற்றுக்கொள்வோம். பொழுது மறைந்துகொண்டு போகிறது. கங்கைக்குப்போய் கைகால் சுத்தம்செய்து கொண்டு கோயிலுக்குப்போகலாம் எழுந்திரும்" என்றுகூறி சுவாமியார் எழவே, நானும் எழுந்தேன்.

நாங்கள் கோயில் சந்நிதி போய்ச் சேர்ந்தபோது எங்கிலும் ஒரே கூட்டம் பொங்கிப் பெருகியது. தீபங்களின் ஒளிவெள்ளம் சந்நிதி முன்றலை பிருந்தாவனமாகத் திகழவைத்தது.

"கார்த்திகை உற்சவத்துக்கு இவ்வளவு கூட்டம் சேருகிறதா சுவாமியார்?" என்று நான் வியப்புற்றபோது "இதென்னகூட்டம் ஆடி உற்சவத்துக்குத் திரளும் கூட்டத்தில் ஐம்பதில் ஒருபங்கு கூட இருக்காது. பெரும்பகுதியும் இதுமாதிரி கூட்டம் தைப் பொங்கல், வருஷப் பிறப்பு போன்ற நாட்களிலும் கூடுவது இப்பொழுதெல்லாம் வழக்கமாகிவிட்டது. சாதாரண நாட்களிலேயே கதிரமலைக்கு யாத்திரை வருவோரின் எண்ணிக்கைக்கு குறைச்சலிருக்காது" என்று கூறினர் சுவாமியார்.

கீழ்வானத்தில்எழுந்துவந்து கொண்டிருந்த பௌர்ணமிச் சந்திரனின் நிலவொளியில் மாணிக்ககங்கை முத்தும் மணியும் பவள முமாகவாரியடித்துப் பாய்ந்துகொண்டிருந்த வேளை கோவிலுக்குக் கோபுரமாக உயர்ந்து ஓங்கியதொரு யானை சர்வாலங்காரங்களுடனும் கொடி குடை ஆலவட்டப்பெருமை பிரதான்யங்களுடனும் முன்வர, தீபஉற்சவம் ஆரம்பமாயிற்று. (தொடரும்)

## மண் மணம்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

நல்ல பூமி தென் பட்டதோ அங்கு குடியானவர்கள் விரைந்து அதை எடுத்துக்கொள்வர். அப்படியல்லாவிட்டாற் பூமி கிடைக்காது. மூன்ருவது வருஷம் பாகிம் ஒரு வியாபாரியுடன் சேர்ந்து ஒரு புல் நிலத்தைச் சில குடியானவர்களிடம் குத்தகை எடுத்தான் அதை நன்றாக உழுதபின் ஒரு சச்சரவு உண்டாயிற்று. அதனுற் குடியானவர்கள் சட்ட நடவடிக்கையை நாடினர்கள். உழுத பலன் இல்லாமலே போய்விட்டது.

"அது என் சொந்தப் பூமியாக இருந்திருந்தால், இந்தத் தொந்தரவுகள் ஒன்றும் வந்திருக்காது" என்று பாகிம் சஞ்சலமடைந்தான்.

அவன் விலைகொடுத்து வாங்கக்கூடிய நிலம் கிடைச்சுமா என்று பார்த்தான். ஒரு குடியானவன் ஆயிரத்து முன்னூறு ஏக்கர் வாங்கியிருப்பதாக அறிந்தான். அந்தக்குடியானவன் பின்பு அதனுல் கஷ்டத்துக்குள்ளாக வேண்டி இருந்ததால்,' அவன் மலிவாக அப் பூமியை விற்றுவிட எண்ணினன். பாகிம் ஆயிரத்தைநூறு றூபிள்கள் தருவதாக ஒப்புக்கொண்டு பாதியை உடனேயும் மிகுதியைப் பின்னர் தருவதாகவும் பேரம் செய்து கொண்டான்.

இந்தச் சந்தர்ப்பத்தில், ஒரு வியாபாரி தன் குதிரைகளின் சீவனத்துக்காக தானியம் வாங்கவந்தவிடத்தில் ஒரு நாள் பாகிம் வீட்டிற் தங்கினன். அவன் பாகிமுடன் தேநீர் அருந்திக்கொண்டு பேச்சுக் கொடுத்தான். "நான் பஷ்கீர் வசிக்கும் ஊரிலிருந்து திரும்பி வருகின்றேன். அவ்விடத்தில் நான் 13000 ஏக்கர் நிலம் ஆயிரம் றூபிளுக்கு வாங்கி இருக்கிறேன். அங்கேயுள்ள தலைவருடன் சிநேகம் செய்துகொண்டால் விரும்பிய அளவு நிலம் பெற்றுக்கொள்ளலாம். நான் நூறு றூபிள் விலையுள்ள பட்டு ஆடைகளும், வீட்டுக்காகிய துணிவகைகளும், ஒருபெட்டி தேயிலையும். அருந்த விரும்பினேருக்கு உவைனும் கொடுத்தேன். ஒரு ஏக்கர் எட்டுக் 'கோப்பைக்' விலையாக வாங்கினேன் என்று கூறித் தன்னிடமிருந்த வியாபாரக் கடதாசிகளைப் பாகிமுக்குக் காட்டினன். மேலும் தொடர்ந்து, 'பூமி ஒரு ஆற்றுக்கருகில் உள்ளது. மிக நல்ல பூமி. மண் முன்னர் ஒருபோதும் உபயோகப் படுத்தப்படவில்லை' என்றுசொல்லி முடித்தான்.

பாகிம் அவனிடம் பல வினக்கள் எழுப்பினன். அவன் பதிலுக்கு 'பஷ்கீருக்குச் சொந்தமான நிலத்தை நீ ஒருவருஷம் முழுவதும் நடந்தாலும் கடந்துவிட முடியாது. அவர்கள் ஆடுகளைபோல அவ்வளவு எளிமையானவர்கள். அவர்களிடம் ஒன்றுமில்லாமலே நிலம்வாங்க முடியும், என்ருன்.

பாகிம் இந்த விஷயங்களைக் கேட்டுவிட்டு அங்கேபோனுல் இப்போ இங்கே வாங்குவதிலும் பார்க்க பத்துமடங்கு கூடிய நிலம் வாங்கலாமே என எண்ணினன்.

(அடுத்தவாரம் முற்றும்)

## ஆண்மையில் பெண்மையும்...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

தாம் கற்றுக்கொண்ட கற்பனை ஒழுக்கங்களை கடக்கும் தருணம் சந்திக்குமிடத்து அச்சம தோன்றி அந்நெறியினின்றும் தவருது காக்கும் ஆயின். ஆண்பாலருக்கும் அஃது அமையவேண்டியதே. நன்னெறியை புரவாது தீநெறிச் சேறும் அச்சமாயின் அஃது முற்கூறியவாறு இழுக்குடையதே. அதனை ஆன்றோரெல்லாம் வெறுத்தொழிப்பர்.

தன்னுடலுக்குண்டாவதோர் இடையூறு காரணமாக, அஞ்சுதல் நல்லச்சமன்று, அஃதாவது தூயநெறி காப்பான் கருதி வாழ்க்கையில், அவ் வாழ்க்கைக்கு இடையூறுவன வரும்போது, அவ்விடையூற்றிற்காக அஞ்சித் தன்னுடலை மாத்திரம் கருதி அவ்வறநெறியை விடுத்து உடலையே பேணுதல். மற்று அறநெறியைப்பிடித்து வாழும் வாழ்க்கையுடையார், அறம் திறம்பரமை காக்கவேண்டி அறவாழ்வு வாழவேண்டித் தம்முடலுக்கு இடையூறு நேராதவாறு அவ்வுடலுக்காக அஞ்சி உடலை புரத்தல் வேண்டற்பாலதே. எனவே அஞ்சி வாழும் நெறி இரண்டு கண்டாம். ஒன்று உடல் நலம் மாத்திரமே கருதி அறநெறியைப் புறக்காட்டி வாழ்தல். மற்றையது அறநெறி கடைப்பிடித்துத் தம்முடல் நலமும் பேணி வாழ்தற்காக அஞ்சி வாழ்தல்; முன்னையது ஏழமையின் பாற்படும். இவ்வாருய அச்சத்தையே பாரதியாரும் "அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லை" என எடுத்துக்கூறியதாகும். எனவே இவ்வச்சத்தின் நிழ்ச்சித்திறனை விளங்தக் கூறின் உயிர் நலங்கருதிய அச்சம் என்றும், உடல்நலங்கருதிய அச்சம் என்றும் இருவகைத்தாக இயலும். உடல் நலம் மாத்திரம் கருதிய அச்சம் உடலைப் பேணுவான் கருதி நெறியல்லன செய்தற்கும் மனதை இசைவிக்கும். உயிர் நலம் கருதிய அச்சம் நன்னெறிகளைக் கடைப்பிடித்து, அந்நெறிகளினின்றும் மனம் விலகுதற்கண், மனதை உடைத்து அந்நெறியினின்றும் விலகாது மனதை நிறுத்தி அந்நிலைக்கண் உடலுக்கு இடையூறுவரினும் அதனையும் பேணத ஆற்றலை விளைப்பது. இவ்வச்ச நிலை ஆண்மையுடையார்க்கு அஞ்சாமை, வீரம், துணிவைப்பிறப்பித்து உடலைத் துரும்பாக மதிக்கச்செய்யும்; பெண்மையுடையார்க்கும் நெறிதவறுங்கால் அச்சம் பெருகி தம்முடலையே துரும்பாகவும் மதிக்கும் அஞ்சாமையை மேற்கொள்ளச் செய்யும் ஆற்றலுடையது ஆகவே உயிர்நலங்கருதிய அச்சம் நிகழுமிடத்து, உயிரின் நலத்துக்குப்பாதகமான தீமைகளுக்கு அஞ்சுதலும், அதனல், தீமைகளினின்றும் காத்தற்கு ஒரேவழி உடலை இழக்கநேரினும் அதற்கு மனம் இசைதலும் உளவாம்

இப்பொழுது எதிரான இருவேறு தன்மைகள் ஒருங்கு நிகழக் காண்கின்ருேம். ஒன்று அச்சம்; மற்றையது அஞ்சாமை; பெண்மைக் குணத்தின் இயல்பு அச்சம்; ஆண்மைக் குணத்தின் இயல்பு அஞ்சாமை ஆகவேண்டும். ஏனெனில் ஒரு பொருளில் நேர்எதிரான இரு பண்புகள் இருக்கமுடியாது; அவ்வாறிருக்குமாயின் அப்பொருளில் அவ்விருபண்புக்குமுரிய இருமூலப்பொருள்களின் சேர்க்கையதாகவேண்டும். ஆதலின், பெண்மகள், ஆண்மகனிடத்து அச்சமும், அஞ்சாமையும், ஆகிய எதிர்ப்

4-ம் பக்கம்பார்க்க)


### வரி விளம்பரம்

#### அரைச் சலார்

உங்கள் அபிமான ஸ்ருடியோவுக்கு இன்றே விஜயம் செய்யுங்கள். ஸபாஸ் ஸ்ருடியோ 11, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 1805

#### சொனென் சையின் பற்றறிகள்

விற்பனைக்குப்பின் எமது சிறந்த சேவைகள் உங்கள் பற்றறிகளுக்குக் கிடைக்கும். விலை நிதானம்.

துரை அன்ட் கோ
23/3 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். 1899

#### 'ஐந்து கண்டங்கள்'

சிறுவர்களுக்குப் பயன் தரும் நூல. விலை சதம் 10. தபாலில் பெறவிரும்புவோர் இரண்டு பத்துச்சத முத்திரைகளுடன் விண்ணப்பிக்கவும். சாரதா புத்தகசாலை, தேவாலய வீதி, யாழ்ப்பாணம். 1835

#### வீடு வாடகைக்கு

குழாய் நீர், மின்சாரம், கார் கராஜ், மற்றும் சகல வசதிகளுடன் கூடிய வீடு திருநெல்வேலி பரமேஸ்வரா லேனில் வாடகைக்கு உண்டு. பாடசாலை, புகையிரதநிலையம், பஸ்நிலையம், சந்தை யாவற்றிற்கும் அருகாமையில் உள்ளது. விண்ணபிக்கவும்: செல்லக்கண்டு ஐக்கியமாகாண வங்கி, யாழ்ப்பாணம். 1822

#### கன்வஸர்கள் தேவை

தரத்திலும் குணத்திலும் சிறந்த பிரசித்தி வாய்ந்த பற்பொடிக்கு வடமாகாணம் முழுவதற்கும் கன்வஸர்கள (Canvassers) தேவை. பிணைப் பணம் ரூபா 250/-. சம்பளம் மாதம் 100 ரூபாவும் கமிஷனும். விரும்புவோர் தராதரத்தையும், அனுபவத்தையும் குறித்து கீழ்க்காணும் விலாசத்துக்கு விண்ணபிக்கவும். சோ. நரசிங்கம், தொல்புரம் கிழக்கு, சுழிபுரம். 1830

#### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் ...ந்திரிமார், அரசியற் பிரமுகர் ...ள் எம்மிடம் சிகிச்சை பெற்ற ...பரங்கள் அடங்கிய கற்ற ...ரக் இனும். தொய்வுக்கு ...0 நாள் மருந்து 12/50 நீரிழி...க்கு 10 நாள் மருந்து 10/50. ...வைத்தியர் பரிபூரணநாதர் ...கலாயபிள்ளையார் கோவி...டி யாழ்ப்பாணம.



பொதுநங்கை!

உங்கள் கவனத்திற்கு ஆ. சி. சின்னையா நகைமாளிகை.

உங்கள் அழகமித ஆபரணங்கள் நவநாகரீக முறைப்படி குறித்த திகதியில் செய்து உத்தரவாதத்துடன் கொடுக்கும் நம்பிக்கையுடைய நகைமாளிகை ஆ. சி. சின்னையா நகைமாளிகையே!

ஆ. சி. சின்னையா அன் சன்ஸ், நெல்லியடி, கரவெட்டி. 1

விற்பனையாகிறது!

# ஈழநாடு தினக்குறிப்பு 1964

விலை: ரூபா 1-00

## தெல்லிப்பழை
## யூனியன் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

டி கல்லூரியின் பழையமாணவர் சங்கப் பொதுக் கூட்டம் இம்மாதம் 18-ம் திகதி பி. ப. 4-30 மணிக்கு (18-1-64) டி கல்லூரி மண்டபத்தில்கூடும்.

பழையமாணவர்கள் தங்கள் தற்போதைய விலாசங்களையும் வருடாந்த சந்தாப்பணமாகிய ரூ. 2-00 ஐயும் வெகுவிரைவில் கீழ்க்காணும் விலாசத்துக்கு அனுப்புமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை.
4-1-64.

V. சுப்பிரமணியம்
A. மாணிக்கவாசகர்
கௌரவ இணைக் காரியதரிசிகள்.

# கலாபவனம் பிலிம்ஸ்

ஈழநாட்டுத் தமிழ் மக்களின் உயரிய பண்பாட்டைக் காட்டுவதற்கென முதன்முதலாக தயாரிக்கவிருக்கும் உன்னத சினிமாச் சித்திரம்.

இச்சினிமாவுக்கென சிறந்த நடிகர் - நடிகையர் - நடன நிபுணர்கள் தேவைப்படுகின்றனர்.

சினிமாவில் பங்குபெற விரும்புவோர் நிகழும் 1964 தை 8 ஆம் தேதி தொடங்கி 12 ஆம் தேதி வரைக்கும் இச்சினிமாச் சித்திரத்தின் டைரக்டரை நேர் முகமாகக் கண்டு விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பிக்கும் நேரம்:-
காலை 9-00 — 11-00 மணி வரை
மாலை 3-00 — 5-00 மணி வரை

காரியாலயம்: 'கலாபவனம்'
4, கன்னியர் மட வீதி,
யாழ்ப்பாணம்.

# இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) ரனாணி (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) நவா (கொம்பனித்தெரு)
கல்யாணி (காவலப்பிட்டியா) ஸ்ரீகிருஷ்ணு (திருமலை) மொடேர்ன் (பதுளை) விஜிதா (ஹட்டன்)
விஜயா (மட்டக்களப்பு) ஜெமினி (குருகலை)

வியப்பு, திகைப்பு, விறுவிறுப்பு, வெள்ளமெனத் துள்ளிவரும் இசையமைப்பு!
உங்களை மகிழ்விக்கும் அற்புதப் படைப்பு!
உணர்ச்சிக் கோர்வையிலே உருவான உன்னத குடும்பச் சித்திரம்!!



எம். ஜி. ராமச்சந்திரன் - பி. சரோஜா தேவி
எஸ். வி. சுப்பையா - எம். என். நம்பியார்
எம். வி. ராஜம்மா - நாகேஷ் - அசோகன்
மற்றும் பலர் திறம்பட நடித்த
சரவணா பிலிம்ஸ்

# பணத் தோட்டம்

இசையமைப்பு: விஸ்வநாதன்-ராமமூர்த்தி
தயாரிப்பு: ஜி. என். வேலுமணி
டைரக்ஷன்: கே. சங்கர்

மனோகரா (யாழ்ப்பாணம்)
வீரப்பா—ராஜசுலோசனா நடித்த
கைதி கண்ணாயிரம்

அரசாங்க கேள்விப்பத்திரங்கள்

சௌக்கியப் பகுதி

என் 3283-1963/64-ம் ஆண்டுக்கு அழுக்கு ஆடைகள் சலவை செய்தல். கேள்விப்பத்திரங்கள் முடிவு திகதி 31-1-64.

என் 3284 - ஆஸ்பத்திரிகளுக்கு சமைத்த சாப்பாடு விநியோகம் செய்தல். கேள்விப்பத்திரங்கள் முடிவு திகதி 31-1-64.

கடற்றொழிற் பகுதி

என் 3250-பேசாலையிலுள்ள கடற்றொழிற் பகுதி ஐஸ் உற்பத்திப் பொறித் தொகுதியிலுள்ள எண்ணெய் இயந்திரத்தைக் கழற்றுவதற்கும், மின்விசை மோட்டார் ஒன்றை விநியோகித்து, நிறுவுவதற்குமான கேள்விப்பத்திரங்கள், முடிவு திகதி 17-1-64.

இதன் முழுவிபரங்களுக்கும் 3-1-64 இல் வெளியான அரசாங்க வர்த்தமானியின் I-ம் பகுதி, II-ம், தொகுதியைப் பார்க்கவும். இதன் பிரதிகளை சகல கச்சேரிகளிலும், பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் கந்தோர்களிலும், தபாற் கந்தோர்களிலும், உப - தபாற்கந்தோர்களிலும், புகையிரத நிலையங்களிலும் பார்வையிடலாம்.

# மட்டக்களப்பில் கடும் மழை
## பல பகுதிகளில் வெள்ளம்; நூற்றுக் கணக்கான வீடுகள் சேதம்

மட்டக்களப்பு, சனி

கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் கடும் மழையினால் மட்டக்களப்பு மாவட்டம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது கடுமையாகப் பெய்யும் மழையைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளம் காரணமாக ஆயிரக்கணக்கான நெல் வயல்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. நூற்றுக்கணக்கான வீடுகள் சேதமடைந்துள்ளன.

நேற்றும் இன்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 27 மணி நேரமாகத் தொடர்ந்து மழை பெய்துகொண்டிருக்கிறது. சில பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதால் போக்குவரத்துகள் தடைசெய்யப்பட்டுள்ளன. மழை இன்னும் இரண்டு மூன்று தினங்களுக்குத் தொடர்ந்து பெய்தால் நிலைமை மேலும் மோசமாகலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரண உதவியளிக்குமாறு மட்டக்களப்பு முதல் எம். பி. திரு. செ. இராசதுரை தொழில் மந்திரி திரு. குணசேகராவை தந்தி மூலம் கேட்டுள்ளார்.

## இடமாற்றம்

மல்லாகம், சனி

அளவெட்டி சதானந்தவித்தியாசாலையில் கடமையாற்றிய பண்டிதை சைவப்புலவர் தங்கம்மா அப்பாக்குட்டி, இவ்வருடம் ஜனவரிமாதம் முதல் தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## தன்னை வென்ற...

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

டிக்க வேண்டுமென்ற அவருடைய அபிலாஷை 1956-ம் ஆண்டு நிறைவேறியது யாவரும் அறிந்த விஷயம். பொது மனிதனின் யுகம் ஆரம்பித்து விட்டதென்று கூறினர் அவர் அப்பொழுது. வெளியே கூடியிருந்த பொதுமக்கள் எல்லோரையும் பாராளுமன்ற சபை மண்டபத்துக்குள் நுழைய விட்டு (அவர்களில் ஒருவர் சபாநாயகர் ஆசனத்திலும் வீற்றிருந்து பார்த்தார்!) சாதாரண பொதுமனிதன் எவனும் அந்த மௌசான மண்டபத்துக்குள் வந்துசேரலாம் என்ற உண்மையை நிதர்சனமாகக் காண்பித்தார்.

அவரிடத்தே சில குறைபாடுகள் இருந்திருக்கலாம். ஆனால் அவருடைய உண்மையான தேசபக்தியையும், எடுத்த காரியத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற மனோதிடத்தையும், பெருங் குடிப்பிறப்பில் வந்த பெருந்தன்மையையும் மறுக்க முடியாது. உயிர்போகும்நேரத்தில் கூட, 'ஒரு முட்டாள் பிக்கு என்னைச் சுட்டுவிட்டான்' என்று குரோதமில்லாமல் கூறிவிட்டுத்தான் உயிர்விட்டார். அரசியல் ராஜதந்திரத்துக்காக அவர் தமிழைப் பகைத்துக்கொண்டதுபோலத்தோன்றினாலும், அவர் இன்று உயிர்வாழ்வாராயின் எமது பிரச்னைகளை சுமுகமாகத் தீர்த்திருப்பார் என்பது நிச்சயம்

(திரு. பண்டாரநாயகா இப்பொழுது உயிரோடிருந்தால் அவருக்கு வருகிற புதன்கிழமை 65 வயது பூர்த்தியாகும். அவர் பிறந்தது 1899-ம் ஆண்டு ஜனவரி 8-ம் திகதி)

## உலகமேடை

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

உலக வழக்கழிந் தொழிந்து
சிதையா உன்
சீரிளமைத் திறம் வியந்து
செயல்
மறந்து வாழ்த்துதுமே."

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" கேட்கும்போது தமிழுக்கு அழிவேது? முடிவுதான் ஏது?

இலங்கையின் மொழிகளில் பண்பட்ட, பழைய மொழி தமிழே. தமிழைப் பொறுத்தவரை மொழிச்சிறுபான்மைக்கு முதலிடமளிக்க வேண்டுமேதவிர, பெரும்பான்மை சிறுபான்மை என்ற அரசியல் கண்ணோட்டம் தமிழ் விஷயத்தில் தவறானது.

"வாழ்க தமிழ் மொழி
வாழ்க சுதந்திரம்
வாழ்க நற்றமிழர்"

— பாரதியார்

## யு என். பி. ...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

| | |
|---|---|
| (சுதந்திரக் கட்சி) | 5635 |
| எச். வி. வீரசூரிய (சமசமாஜ) | 246 |
| பழுதானவை | 125 |
| மொத்த வாக்காளர் தொகை | 41,051 |

1960-ம் ஆண்டு மார்ச்மாதம் நடைபெற்ற தேர்தலில் அப்போது சுதந்திரக்கட்சி சார்பில் போட்டியிட்ட திரு முதியான்சே தென்னக்கூன் திரு கவிசேன ஹேரத்தை 5,028 அதிகப்படியான வாக்குகளால் தோற்கடித்தார். 1960-ம் ஆண்டு ஜூலையில் நடைபெற்ற தேர்தலிலும் திரு. முதியான்சே, திரு. ஹேரத்தை 3,597 வாக்குகளால் தோற்கடித்திருந்தார்.

## "சிங்கள ஊழியரை..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஓரளவு தம்மால் தமிழில் பேசமுடியுமே தவிர, தமிழில் எழுதவோ, வாசிக்கவோ முடியாதென்பதை அவரே என்னிடம் நேரில் கூறியிருக்கிறார்.

மாநகரசபையின் நாளாந்த அலுவல்கள் தமிழிலேயே நடைபெற்றுவருகிறது. இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட சிங்கள உத்தியோகத்தர், தினவரவு பதிவுகளை தயாரிக்கவோ அல்லது தொழிலாளர்களின் முறைப்பாடுகளை தமிழில் வாசித்து உணரவோ அவரால் முடியாது. ஆகவே இவ்வுத்தியோகத்தரை உடனடியாக இடமாற்றம் செய்து இவருக்குப்பதிலாக தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்ற ஒரு உத்தியோகத்தரை இங்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன். இவ் விஷயத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்கவும்.

## சிங்கள 'லேபல்'கள் ஆங்கிலமாகின

கொடிகாமம், சனி

நேற்றுக்காலை மெயில் புகையிரதத்தில்வந்த இரு தபாற்பைகளின் 'லேபல்'கள் சிங்களத்தில் மட்டுமே எழுதப்பட்டிருந்ததால், கொடிகாமம் புகையிரத நிலையத்தில் அப்பைகளை ஏற்றுக்கொள்வதற்கு பருத்தித்துறைபஸ் கண்டக்டர் மறுத்துவிட்டதை தொடர்ந்து 'லேபல்'கள் ஆங்கிலத்தில் எழுதப்பட்டன. இதன் பின்பே அந்த இரு தபாற்பைகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

கொடிகாமம் புகையிரத நிலையத்தில் மெயில்வண்டியிலிருந்து தபாற் பைகளை பஸ் கண்டக்டரே இறக்குவது வழக்கம். இத் தபால் பைகள் இங்கிருந்து பருத்தித்துறை, நெல்லியடி, வரணி ஆகிய இடங்களுக்கு பஸ்ஸில் கொண்டு செல்லப்படும். இதற்கு முன்பும் ஒருதடவை சிங்களத்தில் லேபல் எழுதி வந்த பைகளை பஸ் கண்டக்டர் ஏற்றுக்கொள்ள மறுக்கவே ஆங்கிலத்தில் அந்த லேபலில் எழுதப்பட்டது.

## இன்று சாம்பியன் போட்டி

யாழ்ப்பாணம், ஞாயிறு

குரும்பசிட்டி உதயதாரகை மன்றம் நடாத்திய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி இன்று பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலை மைதானத்தில் நடைபெறவிருக்கிறது. 21 கழகங்கள் பங்கு கொண்ட இச்சுற்றுப்போட்டி டிசம்பர் மாதம் 13-ந் திகதியிலிருந்து நடைபெற்று வந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

12 கழகங்கள் பங்குகொண்ட 2-ம் பிரிவில் தொகுதிச் சாம்பியன்களாக ஏழாலை, மாவிட்டபுரம், சுன்னாகம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த கழகங்கள் தெரிவு செய்யப்பட்டன. இவற்றுள் ஏழாலையை வெற்றிகொண்ட மாவிட்டபுரம் கோஷ்டிக்கும் சுன்னாகத்துக்கும் இடையே இன்று 3-30 மணிக்கு சாம்பியன் தெரிவுக்கான இறுதிப் போட்டி நடைபெறவிருக்கிறது.

## 'லைப்' இன்சூரன்ஸும் சிங்களத்தில்?

யாழ்ப்பாணம், ஞாயிறு

இலங்கை இன்சூரன்ஸ் கார்ப்பரேசனின் யாழ்ப்பாண கிளைக் காரியாலயத்தில் 'லைப்' இன்சூரன்ஸ் பற்றுச்சீட்டுகளும் மோட்டார் இன்சூரன்ஸ் பற்றுச்சீட்டுகள் போல சிங்களத்தில் வழங்கப்படுமென்றும் தற்பொழுது கைவசமுள்ள ஆங்கில பற்றுச் சீட்டுப்புத்தகம் முடிவடைந்தபின் சிங்களப் புத்தகத்திலிருந்தே பற்றுச் சீட்டுகள் வழங்கப்படுமென்றும் தெரியவருகிறது.

## மரண அறிவித்தல்

யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் பிரதம குருக்களாகிய சோ. வைரவநாதக்குருக்கள் நேற்று (4-1-64) மாலை காலமாகிவிட்டார். அன்னாரது பூதவுடல் இன்று (5-1-64) பிற்பகல் 1-00 மணியளவில் அவருடைய இல்லத்திலிருந்து தகனக்கிரியைகளுக்காக செம்மணி மையானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

மகன்: வை. ஜெகதீஸ்வர சர்மா, கொண்டலடி வைரவர் கோவிலடி, திருநெல்வேலி கிழக்கு 1842

கோப்பாயைச் சேர்ந்தவரும், மலரின் கணவரும்; விமலராஜன், ஜெயந்திரன், விஜயதேவி ஆகியோரின் தந்தையும், தம்பிப்பிள்ளையின் மாமனும், D R. குணசேகரத்தின் சகோதரனும், இளைப்பாறிய கல்வி அதிகாரியுமான S. J. குணசேகரம் 4-1-64-ல் காலமானார். அன்னாரின் பூதவுடல் இன்று (5-1-64) பிற்பகல் 3-00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து கண்டுக்குளி பரியோவான் சவக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். உறவினர்களும் நண்பர்களும் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். தகவல்: கனகராசா, 1839

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஜனவரி மாதம் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது